
மேழிச்செல்வம்
வீரர் வாழ்க!
விவசாயி வாழ்க!
விசுவாவசு ௵ மார்கழி ௴
MADRAS RECORD OFFICE
8 JAN 1966
MADRAS

பிலிப்பைன் நாட்டிலுள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் உறுப்பினர் டாக்டர் சாண்ட்லர் அவர்கள் தஞ்சாவூர் தீவிர உற்பத்தி திட்டப் பகுதிகளில் விளைந்துள்ள முன்னேற்றங்களைத் தம்முடைய செப்டம்பர்–அக்டோபர் சுற்றுப்பயணத்தின்போது பார்வையிட்டார்.

செப்டம்பர் மாதம் பட்டுக்கோட்டை, மாயூரம், நாகப்பட்டிணம், கும்பகோணம், தஞ்சாவூர், மன்னார்குடி விவசாயப் பிரிவுகளில் 'ஆடுதுறை 27-வயல் தினம்' கொண்டாடப்பட்டது. இவ விழாவில் பங்கு கொண்ட விவசாயப் பெருமக்கள் ஆடுதுறை 27 நெல் வயலைப் பார்வையிடுகின்றனர்.

நெருக்கடி நேரத்தில் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்காக தஞ்சாவூர் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் 26–9–1965 'காய்கறி விதை விநியோக தினத்தில்' 150 கிலோ விதைகள், ஒரே நாளில் வீடுவீடாகச் சென்று விநியோகிக்கப்பட்டன. காய்கறி விதை விநியோகிக்கப் படுகின்றது.

K.R.No 5/66 93-2

"ஏர்முனை விழா"

தமிழ் நாட்டில் உழவர் பெருமக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடி வரும் விழா, பொங்கல் திருநாளாகும். இந் நாள் அறுவடைப் பருவத்தின் தொடக்க நாளாகவும், இயற்கை அன்னையின் கருணை உள்ளத்திற்கு நன்றி செலுத்தும் நாளாகவும் திகழ்கிறது. உணவுத் தேவையிலும் பொருளாதாரத்தின் பிற முக்கிய துறைகளிலும் தன்னிறைவு காண வேண்டுமென்று நாடு முடிவெடுத்துச் செயலாற்றும் இன்றைய நிலையில், இப்பொங்கல் விழா மேலும் மேலும் சீரும் சிறப்பும் பெறுகிறது. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதனால், நம் நாட்டின் வேளாண்மைப் பொருளாதார நிலை உறுதியடைந்து, வெளிநாட்டு உணவு இறக்குமதியை நாடு நம்பியிருக்கும் நிலை ஓரளவுக்குக் குறைவதுடன், போர் முனையில் அருஞ்சமர் புரியும் நமது படைவீரர்களுக்குத்தங்குதடையின்றி உணவுகிடைத்து வருவதற்கும் வழியேற்படும். உணவு முனையில் நாம் பெறும் வெற்றி, போர் முனையிலும் நமக்கு வெற்றியைத் தேடித் தருமென்பது உறுதி. எனவே, இந்த ஆண்டுப் பொங்கல் திருநாளை "ஏர்முனை விழா" என்ற பெயரில் உழவர் திருநாளாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. (1) பயிரிடுவதற்கேற்ற எல்லா நிலங்களையும் உழுது பயன்படுத்தல்; (2) பயிரிடும் பயிர் போகங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தல் [அண்மையில் பெய்த மழை கூடுதலாக ஒரு போகம் (நவரை) பயிரிட உதவியாக இருக்கும்]; (3) நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டு நிலத்தின் விளைவைப் பெருக்குதல்; (4) (கலவை உரம், தழை உரம் போன்ற) உள்ளூர் உரங்களின் உற்பத்தியைப் பெருக்குதல்; (5) உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, மற்றும் காய்கறிகள் போன்ற துணை உணவுப் பயிர்களைப் பயிரிடுதல்; (6) பால், இறைச்சி, முட்டை, மீன் போன்ற துணை உணவுப் பொருட்களின் பெருக்கத்திற்கு வகை செய்தல் ஆகியவற்றின் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும்படி இந்தவிழா சிறப்பாக வலியுறுத்தும்.

இந்த விழா, மாநில அளவிலும், மாவட்டங்களிலும், நகராட்சிகள், ஊராட்சிக் கூட்டு மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றிலும் கொண்டாடப்படும். இத் திருவிழா, தமிழ்நாடு முழுவதிலும் பொங்கல் திருநாளன்று (1965, ஜனவரி, 14-ம் நாள்) கொண்டாடப் படும்.

ஏர்முனை விழாவின் நிகழ்ச்சி நிரலில், இதன் சிறப்பினை விளக்கும் வகையில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், வேளாண்மைப் பொருட்காட்சிகள், திரைப்படக் காட்சிகள் ஆகியவையும், நாடகங்கள், கிராமிய நடனங்கள், வில்லுப் பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகளும் அடங்கும்.

இன்றைய தேசிய நெருக்கடி காலத்தில், இந்த ஏர்முனை விழாவினைக் கொண்டாடுவது மிக முக்கியமாகும். எல்லா உழவர் பெருமக்களும் இவ்விழாவில் பங்கு கொண்டு சிறப்படையச் செய்யுங்கள்.

[1965 டிசம்பர் 9-ந் தேதியிட்ட அரசாங்க உணவு—வேளாண்மைத்துறை ஆணை எண் 3945]

உள்ளுறை

பக்கம்

நெருக்கடி நிலைமையில் உணவு உற்பத்தித் திட்டங்கள்.	5
முட்டைகோஸ் சாகுபடி அனுபவம் ..	8
விவசாயச் செய்திக் கதிர் ..	10
கால்நடை கருத்தரங்கம் ..	12
கேள்வியும் பதிலும் ..	14
எள்ளுச் செடியைத் தாக்கும் நோய்களும் அதன் தடுப்பு முறைகளும்	17
தீவிர உரத்திட்டத்தின் கீழ் குறுகிய காலக்கடன்	20
வானொலிச் செய்திகள் ..	22
கோகோ ஒரு புதிய பணப்பயிர் ..	26
கன்னியாகுமரி மாவட்டம்—கோடையார் பாசன வசதி	27
1965-ம் ஆண்டு அக்டோபர் மாதக் கால நிலை அறிக்கை.	28

விளம்பரங்கள் :

தங்கப் பத்திரங்கள் ..	4
அமெரிக்கன் ஸ்பிரிங்ஸ் ஒர்க்ஸ் ..	7, 19
மாபெரும் நாடு ..	11
எல்லோரும் ஓர்குலம் ..	13
இந்தியன் ட்யூப் ..	15
டாடா பைஸன் ..	21
சூப்பர் டீசல் இன்ஜின் ..	25
பொட்டாஷ் ...	29
ராஜா பண்ணைத் தோட்டம் ...	30

வேளாண்மைச்செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

DA-65/449

உங்கள் தங்கத்தை நாங்கள் சுத்தமாக்குகிறோம். தங்கத்தை சுத்திகரித்து 23.88 காரட் தூய்மையாக மாற்றுகிறோம். நம் புனித தாய் நாட்டின் சேவைக்காக பதினைந்து ஆண்டுகள் உங்கள் தங்கம் பயன்படும்படி அதை உபயோகிக்கிறோம். உங்கள் தங்கம் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டிற்கு சேவை செய்த பிறகு, மங்களகரமாய் புது மெருகுடன் திருப்பித் தரப்படும்.

நாட்டிற்கு சேவை புரியுங்கள் - தங்கப் பத்திரங்கள் பெறுங்கள்

தங்கத்திற்கு இவ்வளவுதேவை முன்பு நம் நாட்டில் ஏற்பட்டதில்லை. நம்மிடம் அன்னிய செலாவணி மிகவும் குறைவாக உள்ளது. அரசாங்கத்திடம் அதிகம் தங்கம் இருந்தால் அதிகமான அன்னிய செலாவணியும் இருக்கும் அல்லவா. நம் நாட்டின் பாதுகாப்புக்கும், வெளி நாடுகளிலிருந்து உணவுப்பொருள்கள் வாங்கவும், நம் தொழிற்சாலைகள் தங்கு தடையின்றி உற்பத்தியைப்பெருக்க யந்திரங்களையும், கச்சாப் பொருள்களையும் வாங்கவும் தங்கம் தேவை. இதற்கு உங்கள் தங்கம் தேவை. நம் நாடும், நம் தொழிலும், ஏன் நம் வாழ்க்கையும் நிலைத்து நிற்கவேண்டுமென்றால் தற்போது அரசாங்கத்திடம் அதிக அளவில் தங்கம் இருக்கவேண்டும்.

இத்தருணத்தில் உங்கள் தங்கத்தை கடனாக தரும்படி உங்களுக்கு அரசாங்கம் வேண்டுகோள் விடுகிறது. தங்கத்தை விற்று விடும்படியோ அல்லது தானமாக வழங்கும்படியோ அரசாங்கம் உங்களை கேட்கவில்லை. நீங்கள் தரும் தங்கக் கட்டிகள், தங்க நாணயங்கள், தங்க ஆபரணங்களுக்குத் தங்கப்பத்திரம் தரப்படும். அரசாங்கம் உங்கள தங்கத்தை 23.88 காரட் மாற்றுக்கு தூய்மைப் படுத்தும் (பழைய ஆபரணங்கள் 18 முதல் 22 காரட் தூய்மை மட்டுமே, தங்க நாணயங்கள் 22 காரட் தங்கத்தில் செய்யப்பட்டவை). தூய்மைச் செய்யபபட்ட தங்கத்தின் எடை தங்கப பத்திரத்தில் குறிப்பிடப்படும். இந்த சுத்த தங்கம் 15 ஆண்டுகளுக்குப் பிறகு உங்களுக்கு திருப்பித்தரபபடும். தங்க ஆபரணங்கள் கொடுத்து தங்கப பத்திரங்கள வாங்கியிருந்தால், பதினைந்து ஆண்டுகளுககுப் பிறகு திருபபித் தரபபடும் தங்கத்தைக் கொண்டு நீங்கள் விரும்பும் மாற்றுக்கு நகைகள செய்துகொள்ளலாம்.

தங்க ஆபரணங்களாக முதலீடு செய்திருந்தால் அந்த ஆபரணங்களின் செய்த கூலிக்கு ஈடாக 10 கிராம் சுத்த தங்கத்திற்கு ரூ 3 வீதம் ரொக்கப் பணம், தங்கப் பத்திரத்துடன் தரப்படும். (ஒரு தோலா 11.66 கிராம்). ஆண்டுதோறும் 10 கிராம் சுத்தத்தங்கத்திற்கு ரூ 2 வீதம் வட்டி தரப்படும். (ஒரு பவுன் 8 கிராம் எடை). இத்தொகைக்கு வருமானவரி இல்லை. தங்கப் பத்திரங்களுக்கு செல்வ வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. வெகுமதி வரி மற்றும் எஸ்டேட் வரிகளில் கணிசமான சலுகைகள் உண்டு.

நீங்கள் தங்கத்தை தரும்போது தங்கம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்று கேட்கப்பட மாட்டாது. வருமானவரிச் சட்டம், தங்கக் கட்டுப்பாடு உத்தரவு அல்லது கஸ்டம் விதிகளின் கீழ் நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்பட மாட்டாது

தங்கம் மாதிரியே தங்கப் பத்திரங்களையும் பாங்குகளில் செக்யூரிட்டியாக வைத்து பணம் கடன் வாங்கலாம். பெங்களூர், பம்பாய், கல்கத்தா, சென்னை, நாகபுரி, மற்றும் புது டில்லியில் உள்ள ரிஸர்வ பாங்க் ஆப இந்தியாவின் காரியாலயங்களிலும், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் அதன் துணை பாங்குகள் ஆகியவைகளின் எல்லா கிளைகளிலும், தங்கப பத்திரங்கள் வழங்கப்படும்.

உங்கள் தங்கத்தையும், தங்க நாணயங்களையும், தங்க ஆபரணங்களையும் கொடுத்து தங்கப பத்திரங்களாக மாற்றிக் கொள்ளுங்கள் நாட்டின் சேவைக்காக உங்கள் தங்கத்தைத் தாருங்கள்.

வெளியிட்டோர்: நிதி அமைச்சகம், இந்திய அரசாங்கம்

தங்கத்தை மிகவும் பத்திரமாக வைத்துக்கொள்ள
தங்கப் பத்திரங்கள் வாங்குங்கள்

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனா
லுழந்தும் உழவே தலை.

மலர் 22 | விசுவாவசு௵ மார்கழி௴ 1965—66—டிசம்பர்-ஜனவரி | இதழ் 12

நெருக்கடி நிலைமையில் உணவு உற்பத்தித் திட்டங்கள் *

[திரு. K. V. ராமநாதன், I.A.S., விவசாயத் துறை நெற் யாளர்.]

எல்லையில் எதிரிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இந் நேரத்தில் எல்லோரும் உழைத்து உற்பத்தியைப் பெருக்குதல் மிகவும் முக்கியமானதாகும். நாளுக்கு நாள் பெருகிவரும் மக்களுக்கு உணவளிக்கவும், நாட்டின் உணவுப்பற்றுக்குறையை போக்கவும், எண்ணற்ற இன்னல்களை ஏற்று தியாகம் புரியும் நம் வீரர்களுக்கு சீரிய உணவளிக்கவும் சிறப்பாக நாம் உணவு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நேரத்தில் இவ் உணவு உற்பத்தியை மிகவிரைவாகவும் குறுகியகாலத்திலும் பெருக்கவேண்டும். இவ்விதம் குறுகிய காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவது எப்படி என்பதுதான் நம் தலையாய பிரச்னை.

விவசாயத்தில் பரவலாக உணவு உற்பத்தி பெருக்கத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவதைவிட உற்பத்தி பெருக்கத்திற்கான சூழ்நிலைகள் நன்கு அமைந்துள்ள பகுதிகளில் சிபாரிசு செய்யப்படும் எல்லா திருந்திய சாகுபடி முறைகளனைத்தையும் கட்டுக்கோப்பாக பின்பற்றுவதன் மூலம் அதிக விளைச்சலை பெறமுடியும் என்பது நிச்சயம்.

"சான் உழவும் முழ எருவும் சரி"
"பசு உரத்திலும் பழம் புழுதி நல்லது"
"புழுதி உண்டானால் பழுதில்லை"
"முதலைக்குறைத்து நெருங்க நடு"
"வெட்டி களையெடுத்தால் கட்டு முக்கலங்காணும்"

என்னும் பழமொழிகள் அனைத்தும் திருந்திய சாகுபடி முறைகளையே மறைமுகமாக வலியுறுத்துகின்றன. ஆனால் திருந்திய சாகுபடி முறைகளில் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ மட்டுமே பின்பற்றுவதால் எதிர் பார்த்த அளவிற்கு விளைச்சலைப் பெறமுடியாது. விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்யும் பயிருக்கு ஏற்ற சாகுபடி முறைகள் அனைத்தையும் ஒருங்கே கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு எல்லா விவசாயிகளும் திருந்திய முறைகளைக் கடைபிடித்தால் விளைச்சல் கனிசமான அளவிற்கு பெருகும்.

நல்ல விளைச்சலுக்கு அடிப்படை நல்ல வித்துதான் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே நல்ல வித்துக்களை உபயோகிப்பதே முதல்படி. விவசாயத் துறையில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக சிறப்பியல்புகள் பலகொண்ட ஆற்றல் மிக்க உயர்ரகப்பொறுக்கு வித்துக்கள் பல தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஆடுதுறை இருபத்தி ஏழு ரக நெல், சி.எஸ். ஹெச். 1 சோளம், ஹெச். பி. 1 கம்பு, வீரிய மக்காச் சோளம் ஆகியவை சிறந்தவை ஆகும். இவை அதிக உரத்தை ஏற்றுக்கொண்டு அமோக விளைச்சல் தரும் ஆற்றல் பெற்றவை. இவைகளில் சி. எஸ். எச். 1 சோளமும், ஹெச். பி. 1 கம்பும் அடுத்துவரும் பருவத்திலேயே விவசாயிகள் உபயோகித்து அதிக மகசூலைப் பெறலாம். இந்த ரகங்கள் தற்போது சாகுபடியிலுள்ள ரகங்களைவிட இரண்டு மூன்று மடங்கு விளைச்சல் தரவல்லவை.

இப்பயிர்களுக்கு அதிக உரமிட வேண்டும் என்று சொன்ன உடனேயே உரப்பற்றுகுறைதான் நினைவில் தோன்றும். இப்பயிர்களுக்குத் தேவையான உரங்களை போதுமான அளவில் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேண்டிய அளவு இரசாயன உரம் இன்றைய நிலைமையில் கிடைப்பது சற்று கடினம்தான். ஆகவே விவசாயிகள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய ரசாயன உரங்களை அதிக அளவில் உரமேற்று கூடுதல் விளைச்சல் தரும் ரகங்களின் சாகுபடிக்கு உபயோகப்படுத்த வேண்டும். மற்ற பயிர்களுக்கு இயற்கை உரங்களை அதிக அளவில் உபயோகப்படுத்தி உரப்பற்றுக்குறையை சரிக்கட்டவேண்டும். அதனால் இயற்கை உரங்களையும் அதிக அளவில் உற்பத்திசெய்ய வேண்டுவது அவசியமாகிறது. ஒவ்வொரு விவசாயியும் தனக்கு அதிக அளவு தேவைப்படும் உரத்தை தழையுரம் பயிரிடுவதன்

* 1965-ம் வருடம் டிசம்பர் மாதம் 4-ம் தேதி அன்று திருச்சி வானொலியில் ஆற்றிய உரை.

மூலமும், கம்போஸ்ட் தயார் செய்வதன் மூலமும் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியது மிக அவசியம். பண்ணைகளில் கிடைக்கக்கூடிய கழிவுப்பொருள்கள், குப்பை கூளங்கள், தழைகள் ஆகியவற்றை வீணுக்காமல் கம்போஸ்ட் செய்து நல்ல உரமாக பயன் படுத்த வேண்டும். இது ஒவ்வொரு விவசாயியும் சுலபமாகச் செய்யக்கூடிய ஒன்ருகும். மற்றும், நெல் அறுவடைக்குப்பின் நிலத்தை தரிசாகப் போடாமல் பசுந்தழை உரப்பயிர்களான 45 நாளில் தழை கொடுக்கக்கூடிய சணப்பு, ஆடு, மாடு தின்ஞத கொளுஞ்சி, களர் நிலத்திலும் வளரக்கூடிய தக்கைப்பூண்டு போன்ற தழை உரச்செடிகளை விதைத்து நிலவளத்தை பெருக்க வேண்டும்.

அடுத்து, இப்பொழுதுள்ள உணவுத்தானிய பற்ருக்குறையை உப உணவுப் பயிர்களை சாகுபடி செய்வதன் மூலமும் நிவர்த்தி செய்யலாம். உபஉணவுப்பயிர்களில் முக்கியமானவை சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு ஆகியவை ஆகும். ஒரு ஏக்கரில் விளையும் இக்கிழங்கு வகைகளிலிருந்து கிடைக்கப்பெறும் சக்தி அதே அளவு நிலத்தில் விளையும் மற்ற உணவு தானியப் பயிர்களிலிருந்து கிடைக்கப் பெறும் சக்தியை விட அதிகமாகும். ஆகவே அரிசிக்குப் பதில் இக்கிழங்கு வகைகளை உணவாக உபயோகிக்கலாம். இவை குறுகியகாலப் பயிர்களே. அதாவது 3–4 மாதங்களிலேயே பலன் தரக்கூடியவை. இவைகளுக்கு அதிக அளவு தண்ணீர் தேவையில்லை. மேலும் வருடம் முழுதும் பயிர் செய்யலாம். மாஞவாரிப் பயிராகவும இறைவையாகவும் பயிரிடலாம். சாதாரண கிழங்கு வகைகளை விட அதிக அளவு உற்பத்தியைக் கொடுக்கக்கூடிய சிறந்த ரகங்களும் உள்ளன. குறைந்த் நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களிலும், இக் கிழங்கு வகைகளைப்பயிர் செய்து உற்பத்தியைப் பெருக்குமாறு விவசாயப் பெருமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காய்கறி உற்பத்தியைப் பெருக்குதல் இப்பொழுது மேற்கொள்ள வேண்டிய ஒரு முக்கிய பணி. எல்லா வகைக் காய்கறிகளும் குறுகியகால பயிர்களே. விரைவாக வளர்ந்து நல்ல உணவாக உதவுகின்றன. நமக்கு உணவுப் பொருளாக உபயோகப்படுவதோடல்லாமல் சத்துள்ள ஆகாரமாகவும் ஆகின்றன. சமச்சீர் உணவிற்கு ஒரு நபருக்கு சராசரி 10 அவுன்ஸ் காய்கறி நாள்தோறும் தேவைப்படுகிறது. ஆனல் நாம் இன்று சராசரி 3 அவுன்ஸ் காய்கறிதான் சாப்பிடுகிருேம். ஆகவே ஒவ்வொருவரும் சராசரி 10 அவுன்ஸ் காய்கறி சாப்பிட வழி செய்யும் வகையில் உற்பத்தியை நாம் பெருக்க வேண்டும். இக்குறிக்கோளை அடைய இன்றுள்ள உற்பத்தியைப்போல் ஆறுமடங்கு அதிகம் பெருகச் செய்ய வேண்டும்.

காய்கறி அதிகம் உற்பத்தி செய்ய வீட்டுத் தோட்டங்களிலும், காலிமனைகளிலும், பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், பிற நிறுவனங்களில் உள்ள இடங்களில் காய்கறி சாகுபடி செய்ப வேண்டும். என் பிரதமர் சாஸ்திரி அவர்கள் கூறியது போல கள்ளிப்பெட்டியிலும் கூட காய்கறி உற்பத்தி செய்ய வேண்டும். மேலும் வயல் வரப்புகளிலும், வாய்க்கால்களிலும் வெண்டை, கொத்தவரை போன்ற காய்கறிப் பயிர்களைச் சாகுபடி செய்து உற்பத்தியைப் பெருக்கலாம். இதனல் உணவு தானியப் பற்ருக்குறையையும் சமாளிக்கலாம்; பூரணமான ஆகாரம் உண்டு நோய்களைத் தடுக்கும் சக்தியையும் பெறலாம். வருமானத்திலும் அதிக லாபம் பெறவழி ஏற்படுகிறது.

இதுவரை பொதுவாக இந்த நெருக்கடியான சமயத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கச் செய்யவேண்டிய சில வழிகளைப்பற்றிக் கூறினேன். குறிப்பாக, உடனடியாக மார்கழிப் பட்டத்தில் எப்படி உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைப் பற்றி சில வழிமுறைகள் சொல்ல விரும்புகிறேன்.

நீர்ப்பாசன வசதியுள்ள இடத்தில் கோடை நெல் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இச்சாகுபடியில் இதுவரை கடைபிடித்த முறைகள் அல்லாமல் திருந்திய முறைகள் அனைத்தையும் ஒருங்கே கடைபிடிக்கக் கோருகிறேன். இத்திருந்திய முறைகளைப் பற்றி விவசாய இலாகா பிரசாரம் செய்து வருகிறது. பொறுக்கு விதை உபயோகித்தல், குறைந்த அளவு விதைகளை உபயோகித்து தரமான நாற்று தயாரித்தல், தக்க உரமிடுதல், தகுந்த காலத்தில் மருந்தடித்தல் ஆகிய எல்லா முறைகளையும் ஒன்று விடாமல் விவசாயிகள் எல்லோரும் செய்வதன் மூலம் கணிசமான அளவில் உணவு உற்பத்திப் பெருக்கத்தை அடைய முடியும் என்பது திண்ணம். இதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டங்களாகிய தீவிர சாகுபடித் திட்டம் (IADP அல்லது Package Programme) தீவிர விவசாயப்பகுதித் திட்டம் (IAAP) இவற்றின் கீழ் கிடைக்கக் கூடிய வசதிகளை எல்லா விவசாயிகளும் கேட்டு பெற்று நன்மை அடையக் கேட்டுக்கொள்கிறேன். நெல் சாகுபடி இல்லாத பகுதிகளில் கோடை நிலக்கடலை, கேழ்வரகு முதலியவைகள் பயிர் செய்யப்படுகின்றன. இப்பயிர்களின் ஊடே வரப்புகளிலும் வாய்க்கால்களிலும் காய்கறிப் பயிர்களைச் சாகுபடி செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஏதோ ஒரு சில விவசாயிகளே காய்கறி பயிர் செய்து வருகின்றனர். ஆனல் எல்லோருமே ஊடுபயிராக காய்கறி சாகுபடி செய்தால் உபரி வருமானமும் உற்பத்தியும் பெருகும். இக்காய்கறி ஊடு சாகுபடியில் பிரத்தியேகமான சாகுபடி செலவும் கிடையாது. இதனல் முக்கிய பயிருக்கும் இடையூறு கிடையாது. வெண்டை, கொத்தவரை, கீரை, வெங்காயம் முதலியவை, கடலை, கேழ்வரகு சாகுபடி செய்யும் தோட்டங்களில் வரப்புகளிலும், வாய்க்கால்களிலும் இவ்விதம் ஊடுபயிர் செய்வதற்கு ஏற்றவையாகும். இதற்கான விதைகள் உங்கள் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் பாதி விலையில், வேண்டிய அளவு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே விவசாயிகள் அனைவரும் முழு முயற்சியுடன் இச்சீரிய பணியில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[20-ம் பக்கம் பார்க்கவும்.]

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 40404-64 தேதி 21-4-64 உத்தரவின்படி

1964-65 "ரேட் கான்ட்ராக்ட்" திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட

ஸ்பிரேயர்கள்



'கேடார்'
அசைப்பு ஸ்ப்ரேயர்



'மாருதி'
ஃபுட் ஸ்ப்ரேயர்



'மாருத்'
கையமுத்த ஸ்ப்ரேயர்



'கேடார்-கோஃபி'
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள் :

AMERICAN SPRING & PRESSING WORKS (P.V.T.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்–64.

தமிழ்நாடு, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,

75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், தபால் பெட்டி நெ. 539, பெங்களூர்-2.

முட்டைகோஸ் சாகுபடி அனுபவம்

[இன்றுள்ள நிலைமையில் உற்பத்தியை எல்லா வழிகளிலும் பெருக்கவேண்டியது அவசியமாகும். விஞ்ஞான விவசாயத்தில், விவசாயிகள் நம்பிக்கை கொண்டு திருந்திய சாகுபடி முறைகளைக் கையாண்டால் நிச்சயம் பலன்கிடைக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக கடவூர் பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர் திரு வீ. பொ. சுவாமிநாதன் அவர்கள் திருந்திய சாகுபடி முறைகளைப் பின்பற்றி "முட்டைக் கோஸ்" சாகுபடியில் அதிக விளைச்சல் பெற்ற அனுபவத்தை எழுதுகிறார். எல்லா விவசாயிகளும் இதைப் படித்து பயன்பெறலாம்.—ஆசிரியர்.]

நான் குளித்தலை தாலூகா மஞ்சாநாயக்கன்பட்டி கிராமம் வீரியபட்டியில் வசிக்கும் ஓர் விவசாயி. இப்பகுதி மழையே இல்லாத காடரம்பமான பிரதேசம். பெரிய குளங்களையோ, நிரந்தரமான நீர்பாசன வசதியோ இல்லாத இடம். பள்ளமான இடங்களில் கிணறுகள் தோண்டி மின்சார மோட்டார் மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டு விவசாயம் நடைபெற்று வருகிறது.

[வீ. பொ. சுவாமிநாதன்,
(கடவூர் பஞ்சாயத்து யூனியன்,
பெருந்தலைவர்.)]

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக என்னுடைய நிலத்தில் மிளகாயும் ஒரு முறை புகையிலையும் சாகுபடி செய்து வந்தேன். மிளகாய் சாகுபடி செய்ததில் ஏக்கருக்கு ரூ. 2,000 முதல் ரூ. 3,000 வரை மொத்த வருமானம் கிடைத்தது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் மிளகாய் சாகுபடியில் நன்கு பலன் தரும் தருவாயில் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் மிளகாய் சாகுபடி பாதிக்கப்பட்டதை கடந்த சில ஆண்டுகளின் அனுபவத்தினால் தெரிந்துக் கொண்டு, இவ்வாண்டு தண்ணீர் பற்றுக்குறை ஏற்படும் சமயத்திற்கு முன்னமேயே ஒரு பலன் எடுத்துக்கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு முட்டைகோஸ் சாகுபடி செய்தேன். நான் எதிர்பார்த்தபடி மிளகாய்க்கும் தண்ணீர் தடங்கல் ஏற்படாதபடி, முட்டைகோஸ் அறுவடை செய்த பிறகு அந்தத் தண்ணீர் மிளகாய்க்கும் பாய்ச்ச முடிந்தது.

நான் கடவூர் வட்டார விவசாய விஸ்தரிப்பு அதிகாரியின் உதவியுடன் இவ் வட்டாரத்தில் முதன் முதலாக 70 செண்ட் நிலத்தில் அடியிற்கண்ட முறைப்படி முட்டைகோஸ் சாகுபடி செய்து லாபமடைந்தேன்:—

நாற்றங்கால் தயார் செய்த முறை:—நாற்றுவிட்டுத்தான் நடவேண்டும். நாற்றங்காலில் களைகள் விழாமல் இருக்க இருமுறை தண்ணீர் விட்டு உழுது பாத்திகள் பிரித்து 3 செண்ட் நிலத்தில், ஆவணி மாதம் 15-ம் தேதி நாற்று விட்டேன். நாற்றங்காலுக்கு தொழு உரம் 2 வண்டிகள் போடப்பட்டது. 35 நாட்கள் நாற்றங்காலிலிருந்தது.



நடவு நிலம் பண்படுத்திய முறை:—50 ஆடுகள் கொண்ட பட்டி அந்த நிலத்தில் 35 நாட்கள் உரத்திற்காக இடை போட்டிருந்தேன். தொழு உரம் 10 வண்டிகள் பரவலாக போட்டு 6 முறை உழப்பட்டது.

நடவு:—2 அடி பார் போட்டு, செடிக்கு செடி 10 அங்குலம் இடைவெளி விட்டு, ஊக்கமுள்ளதும், வேர்க்கால் நல்ல முறையில் இருந்ததுமான நாற்றுக்களை மட்டுமே நடப்பட்டது. வேர் பிடிக்கும் வரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் பாய்ச்சினேன்.

பின்செய் நேர்த்தி:— 2 மாதங்கள் கழித்து ஒரு மூட்டை பிண்ணுக்கும் மாட்டுச் சாணமும் தண்ணீரில் கரைத்து இட்டேன். விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, விவசாய மேஸ்திரி ஆகியோர் வந்து பார்த்து ஆலோசனை கூறினார்கள். இப்பகுதி கிராம நல ஊழியர் மற்ற விவசாயிகளைச் சந்தித்து இந்த முறையை பின்பற்றி பயனடையுமாறு எடுத்துக்கூறினார். 10 நாட்களுக்கொரு முறை "என்டிரின்"—என்ற மருந்தை 5 தடவைகள் மருந்தடிக்கும் கருவியின் மூலம் மருந்தடித்தேன். வாரத்திற்கிரு முறை தண்ணீர் விடப்பட்டது.

அறுவடை:—நாற்றுவிட்டு $3\frac{1}{2}$ மாதத்தில் அறுவடைக்கு வந்தது. இலைகள் நன்றாக மூடியவுடன் தட்டிப் பார்த்தால் கெட்டியான சப்தம் உண்டாகும். இதன் மூலம் பயிர் முதிர்ச்சி அடைந்துவிட்டது எனக் கொண்டு அறுவடை செய்துவிடவேண்டும். 12 நாட்களுக்கொரு முறை முதிர்ச்சி அடைந்த கோஸ்களாக பார்த்து வெட்டி எடுத்து அருகிலுள்ள சந்தைகளுக்கு அனுப்பி விற்பனை செய்யப்பட்டது. விலை உயர்ந்திருந்தால் ரூ. 200-லிருந்து ரூ. 500 வரை அதிகமாகக் கிடைக்கும். சென்ற ஆண்டு கடந்த ஆண்டுகளைவிட விலை குறைவாகத்தான் விற்றது. மலைக்கோஸ் வருவதற்கு முன்போ அல்லது பின்போ நாம் போடும் கோஸ் அறுவடை தருவதாயிருந்தால் நல்ல லாபம் அடைய முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவு செலவு விபரம் பின்வருமாறு—

	ரூ.	பை.
ஏ.எஸ்.பி. 14—500 கிராம் விதை	8	00
நாற்றங்கால் தொழு உரம் 2 வண்டி	6	00
நாற்றங்கால் உழவு கூலி, பாத்தி பிடித்தல்	1	00
விளை நிலம் 10 வண்டி தொழு உரம்	30	00
உழவு 4 ஏர்கள்	16	00
கடலை பிண்ணுக்கு 1 மூட்டை	30	00
நடவுக் கூலி 25 பேர்கள்	12	50
இருமுறை களையெடுத்த கூலி	30	00
மருந்து செலவு	20	00
மண் அணைத்த கூலி	12	50
தண்ணீர் பாய்ச்சிய கூலி	20	00
ஆக செலவு ..	186	00

மகசூல்.—

80 மூட்டை (50 கிலோ கிராம் மூட்டைகள்)	1000	00
செலவு ..	186	00
நிகர லாபம் ..	814	00

பெரும்பாலான விவசாயிகள் இன்னமும் பழமையை விரும்புகின்றனர். புதிய முறைகளைக் கையாளுவதில் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றனர். என் போன்ற ஒரு சில விவசாயிகள் செய்யும் புதிய முறைகளைக்கூட விவசாயிகள் பார்த்து 'அவருக்கென்ன நிறைய பணம் செலவு செய்து மருந்து அடிப்பது முதலியவற்றை செய்கிறார்கள்' என்று நினைக்கிறார்கள். அப்படி நினைப்பது தவறேயாகும். மருந்தடிக்க ஏற்படும் செலவு மிகமிகக் குறைவே. அதனால் கிடைக்கும் பயனோ மிக மிக அதிகம் எனக் கூறிக்கொள்கிறேன். இதுபற்றி விவசாய விளக்குனர்களும், கிராம சேவக்குகளும், முக்கியமான விவசாயிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி—ஆர்வத்தை அதிகப்படுத்தி—காய்கறி பற்றாக் குறை பிரச்சினை தீர்க்க வழி செய்கிறார்கள். இன்னும் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். புதிய முயற்சியால் நான் வெற்றி கண்டதுபோல், நாட்டிலுள்ள ஒவ்வொரு விவசாயியும் இலாகாவினால் உதவி பெற்று காய்கறி உற்பத்தியை விருத்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயச் செய்திக் கதிர்

(கே. எம். சுந்தரம், ஆர். எஸ். எர்னஸ்ட், விரிவிளைப் பகுதி, விவசாயக் கல்லூரி, கோவை.)

கோவில்பட்டியில் தீவிர விவசாய சாகுபடி திட்ட முறையை அனுசரித்து கே. 2 சோளத்தில் அதிக மகசூல்,

தீவிர சாகுபடி திட்ட முறைகளை அனுசரிப்பதால் என்ன பலன் என்பதைப் பரிசோதிக்க, 1964–65-ம் வருஷம் கோடைப் பருவத்தில் கோவில்பட்டி அரசாங்கப் பண்ணையில் கே. 2 சோளம் கீழ்கண்ட தீவிர சாகுபடி திட்ட முறைகளை அனுசரித்து சாகுபடி செய்யப்பட்டது.

நிலத்தை வழக்கம்போல் பக்குவப்படுத்தி, ஒரு ஹெக்டருக்கு 10 டன் வீதம் கம்போஸ்ட் போடப்பட்டது. பிறகு ஒரு ஹெக்டருக்கு 40 கிலோ தழைச் சத்தும், 20 கிலோ மணிச் சத்தும் போடப்பட்டது. தழைச் சத்து கொடுப்பதற்கு யூரியாவும், மணிச்சத்து கொடுப்பதற்கு சூப்பர் பாஸ்பேட்டும் உபயோகப்படுத்தப்பட்டது. இந்த உரங்கள் விதை விதைக்கும்பொழுது சால்களில் போடப்பட்டன. ஒரு ஹெக்டருக்கு 18 கிலோ கிராம் வீதம் கே. 2 சோளம் பொறுக்கு விதை விதைக்கப்பட்டது.

பயிர்களில் பூச்சிகள் வராமல் தடுப்பதற்கு, விதைத்து 30 நாட்களுக்குப் பிற்பாடு 0·02 சதவீதம் என்ட்ரின் (Endrin 0·02) தெளிக்கப்பட்டது. மேலும் கதிர்களில் பூச்சிகள் வராமல் இருப்பதை தடுக்க பி.எச்.சி. 10 சத வீதம் (B.H.C. 10%) ஒரு ஹெக்டருக்கு 25 கிலோ கிராம் வீதம் பயிர் கதிர்களில் இருக்கும்பொழுது தூவப்பட்டது. நோய்கள் வராமல் தடுக்க ஒரு ஹெக்டருக்கு 25 கிலோ கிராம் வீதம் கந்தகப் பொடியும் தூவப்பட்டது. மேற் சொன்ன தீவிர விவசாய சாகுபடித் திட்ட முறைகளைச் சீராக செய்ததால் சோளத்தில் அதிகமகசூல் கிடைத்தது. சாதாரணமாக, ஒரு ஹெக்டருக்கு 3,000 முதல் 3,500 கிலோ கிராம் சோளம்தான் விளையும். ஆனால், தீவிர சாகுபடித் திட்ட முறைகளை அனுசரித்ததால், ஒரு ஹெக்டருக்கு 4,500 கிலோ கிராம் சோளம் கிடைத்தது.

ஆகவே, தீவிர சாகுபடித் திட்ட முறைகளை அனுசரிப்பதால் விவசாயிகள் தங்கள் பயிர்களின் மகசூலை அதிகரிக்கலாம். விவசாயிகள் தங்கள் வட்டாரத்திலுள்ள விவசாய விஸ்தரிப்பு அதிகாரியை சந்தித்து, முக்கியமான பயிர்களின் தீவிர விவசாய சாகுபடித் திட்ட முறைகளைத் தெரிந்துக் கொள்ளலாம்.

ஆண்டு முழுவதும் கிடைக்கக்கூடிய லாபகரமான தீவனம்!

கால்நடைகளுக்குத் தீவனம் அவசியம். அதிக உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற இந்த நாட்களில் நமது நாட்டு கால் நடைகளை நாம் மறந்து விடக்கூடாது. பண்ணைகளில் கால்நடைகள் வளர்ப்பு மிகவும் முக்கியம். ஆகவே, ஆண்டு முழுவதும் கிடைக்கக்கூடிய தகுந்த தீவன வகைகள் பயிர் செய்வது அவசியம். சாதாரணமாக பயிர் செய்யப்படும் கம்பு பயிரையும், நேப்பியர் அல்லது யானைப்புல் என்ற புல்லையும் ஒன்று சேர்த்து கம்பு நேப்பியர் ஒட்டு என்ற புதிய தீவனப் புல்லை கோவை விவசாயக் கல்லூரி கண்டுபிடித்தது. இது விவசாயிகளுக்கு கிடைத்துள்ள ஒரு பொக்கிஷமாகும். 1951-ம் வருடத்திலிருந்து இதை, விவசாய இலாகா அதிக உற்பத்தி செய்து, இந்த இராஜ்ஜியத்திலும், மற்ற இராஜ்ஜியங்களிலுமுள்ள முக்கிய விவசாயிகளுக்கு கொடுத்திருக்கிறது.

பரிசோதனைகள் செய்ததில், சாக்கடைத் தண்ணீர் பாய்ந்த இடத்தில் மட்டுமிருந்து, ஒரு எக்கருக்கு 1,90,000 ராத்தல் புல் கிடைத்தது. இப்புல்லின் தீவனச் சத்தின் அளவுகள் நேப்பியர் புல்லைக் காட்டிலும் அதிகமானது. இப்புல்லிற்கு அதிகமான தண்ணீர் தேவையில்லை. இப்புல்லிற்கு அதிகமான தண்ணீர் இருந்தாலும் இப்புல் கெட்டுப் போவதில்லை. ஈரமுள்ள வாய்க்கால் வரப்புகளில் நன்றாக வளரும். அடிக்கடி அறுவடை செய்துகொள்ளலாம். பரந்த அளவில் சாகுபடி செய்ய, நிலத்தைப் பக்குவப்படுத்தி ஒரு எக்கருக்கு 10 டன் வீதம் தொழு உரம் போடவேண்டும். 2½ அடிக்கு ஒரு பார் வீதம் அமைத்து பார்களில் 3 அடிக்கு ஒன்று வீதம் நடலாம். 10 அல்லது 12 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வாரம் ஒரு முறை பாய்ச்சினாலும் நல்லது. சாக்கடைத் தண்ணீர் இருப்பின், இதையும் உபயோகப்படுத்தலாம். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை புல்லை அறுக்கலாம். பரந்த அளவில் இப்புல்லை சாகுபடி செய்தால், இந்த புல் இருக்கும் நிலத்தை சிறுசிறு பாகங்களாகப் பிரித்து, நம் தேவைக்குத் தக்கபடி தினந்தோறும் ஒவ்வொரு பாகத்திலிருந்து புல்லை அறுத்துக் கொள்ளலாம். சாதாரணமாக ஒரு எக்கரிலிருந்து 1,50,000 ராத்தல் பசும் புல் ஒரு வருஷத்தில் அறுவடை செய்யலாம். ஒரு ரூபாய்க்கு 100 ராத்தல் பசும்புல் என்ற விகிதத்தில், ஒரு எக்கரிலிருந்து குறைந்தது வருஷத்திற்கு ரூ. 750 முதல் 1,000 வரை நிகர லாபம் எதிர்பார்க்கலாம். ஒரு முறை நட்ட புல் நல்ல தண்ணீரும், நல்ல எருவும் இருந்து அடிக்கடி தூர் எடுத்து வந்தால் பல வருஷங்கள் இருக்கும்.

முருங்கை மரத்திலிருந்து முருங்கை செடிகளை பதியம் போட்டு உற்பத்தி செய்யமுடியுமா?

சாதாரணமாக முருங்கை மரங்களை உற்பத்தி செய்ய, 6 அடி முதல் 8 அடி நீளமும், 5 அங்குளம் முதல் 7 அங்குல பருமனும் உள்ள கொம்புகளைத் தேர்ந்தெடுத்து நிலத்தில் நடுவதுண்டு. இவ்வாறு நடப்பட்ட கொம்புகள் வேர் பிடிக்க 60 முதல் 65 நாட்கள் பிடிக்கும். மேலும் இவ்விதம் நடப்பட்ட கொம்புகளில் ஒரு சில கொம்புகளே வேர்பிடித்து வளரும். மற்றவை பட்டுப் போகும். குறைந்த காலத்தில் நல்ல வேர் உடைய பதியன்களை

[13-ம் பக்கம் பார்க்கவும்.]



போரிடும் நம் மாவீரர்களைப் பற்றி நாம் மகத்தான பெருமையடைகிறோம். நம் சுதந்திரத்தையும், கௌரவத்தையும், மதிப்பையும், நம் வாழ்வையும், அவர்கள் காத்து நிறுத்தினர். பலம் பொருந்திய விரோதியை விரட்டியடித்தனர். இந்தப் பணியில் பலர் அமரராயினர். பலர் படுகாயமடைந்தனர். நம் மாவீரர்கள் தங்கள் கடமையை செய்து வருகின்றனர். நாமும் எப்போதும் போலவே நம் பணியைச் செய்து அவர்களின் கையை வலுப்படுத்துவோம்.

மாபெரும் நாடு
மாபெரும் மக்கள்

DA-65/F6

கால்நடை கருத்தரங்கம்

[டாக்டர் ஐ. டி. மந்தரமூர்த்தி, ஜி.எம்.வி.சி., பி.வி.எஸ்ஸி., கால்நடை இயக்குனர், சென்னை.]

"இந்தியா, தன் தேவைகளைத்தானே பூர்த்தி செய்து தன் சொந்த வளத்தையே நம்பி வாழ்ந்து சுரண்டலுக்கு இடம் கொடுக்காத நிலையை அடைந்து விட்டால், கீழ்நாடுகளோ, மேல்நாடுகளோ தம் பேராசைப் பார்வையை இந்தியாவின் மீது செலுத்த முடியாது. அதிகச் செலவில் ஆயுதபலம் திரட்டாமலே இந்தியா தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் நிலையை அப்பொழுது அடையும். இந்தியாவின் உள்நாட்டுப் பொருளாதார அமைப்பே எந்த அயல்நாட்டு ஆக்கிரமிப்பையும் தடுக்கும் சிறந்த அரணாக விளங்கும்" என்பது காந்தி அடிகளின் அறிவுரையாகும்.

திட்டமிடுவதன் மூலமாகத்தான் சீரான முறையில் மக்களது அடிப்படைத் தேவைகளை, முக்கியமானவை, அதிமுக்கியமானவை எனப்பகுத்து, நம் சக்திக்கேற்ப செலவிட்டு படிப்படியாக முன்னேற முடியும். திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமானால், மக்கள் திட்டங்களைப் புரிந்துகொண்டு, கொடுக்கப்படும் வாய்ப்பினை பயன்படுத்தி ஆக்க பூர்வமான அபிவிருத்தி வேலைகளில் பங்கு கொள்ள வேண்டும்.

உணவு உற்பத்தித் துறையில் பற்றுக்குறையினைக் களைந்து, சுயதேவையினைப் பூர்த்தி செய்ய திட்டங்களின் வாயிலாக பல்வேறு துறைகளில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இந்நேரத்தில், கால்நடை பராமரிப்புத்துறையில் அமுலாக்கப்படும் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் ஊராட்சி மன்றங்களின் பங்கு என்ன என்பதை கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளின் முன்னிலையில், ஊராட்சி ஒன்றியங்களின் அங்கத்தினர்கள் கூடி விவாதித்து, முடிவெடுத்து செயல்பட ஆரம்பித்துவிட்டனர். இதோ செங்கை மாவட்டம் வழி காட்டுகிறது. கருத்தரங்கம் நடத்திக் காட்டியது.

27—9—1965 முதல் 29—9—1965 வரை செங்கற்பட்டு மாவட்ட அபிவிருத்தி குழு பூவிருந்தவல்லியில் கூடி கால்நடைப் பராமரிப்புத்துறையின் கருத்தரங்கினை நடத்திற்று.

கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும், பால், இறைச்சி, முட்டை போன்ற உணவுப்பொருள்களின் உற்பத்தியினைப் பெருக்குவது பற்றியும், ஊராட்சி ஒன்றியங்கள் விவாதித்து, தாலூகா ரீதியில் விவாதித்து. இறுதியாக மாவட்ட ரீதியில் விவாதித்து முடிவெடுக்கப்பட்டன. முப்பெரும் நோக்கங்களின் அடிப்படையில் கருத்தரங்கம் விவாதங்கள் நடத்திற்று.

(1) பால் உற்பத்தியும், தீவன அபிவிருத்தியும் ;

(2) இறைச்சி உற்பத்தி ;

(3) முட்டை உற்பத்தி.

முதல் நாள்—27—9—1965

தாய் நாட்டிற்கு மரியாதை தெரிவிக்கும் முறையில் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர் திரு மதன்ராஜ் அவர்கள் தேசீயக் கொடியினை ஏற்றிவைத்தார்.

9-30 மணியளவில் திறப்பு விழா.

செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இ.சி.பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். மதிப்பிற்குரிய நம்மாநில கூட்டுறவு அமைச்சர் திரு மன்ருடியார் அவர்கள் கண்காட்சியினை திறந்து வைத்தார்கள். மதிப்பிற்குரிய மாநில உள்துறை அமைச்சர் திரு பி. கக்கன் அவர்கள் கருத்தரங்கினைத் துவக்கி வைத்தார்கள். மாலையில் கால்நடை தீவிர அபிவிருத்தித் திட்டம்பற்றி கருத்தரங்கம் விவாதம் நடத்திற்று. இந்தக் கருத்தரங்கிற்கு செங்கை மாவட்டத்தின் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் தனது பிரதிநிதிகளை அனுப்பிவைத்தது. தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்மீது பல்வேறு கேள்விகள் பிரதிநிதிகளால் மேஜை மீது வைக்கப்பட்டன. அதிகாரிகளுடைய விளக்கங்களைக் கேட்டு பிரதிநிதிகள் திருப்தி அடைந்தனர்.

அன்று மாலை 6-00 மணியளவில் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களுக்கு கலை விருந்தளிக்கப்பட்டது. சென்னை மேலவை உறுப்பினர் திரு வி. கே. இராமசாமி முதலியார் தலைமை வகித்தார்கள்.

இரண்டாம் நாள்—28—9—1965

அரசாங்கத்தின் பிரதிநிதிகளும், மக்களின் பிரதிநிதிகளும் வட்டமேஜை கூடி திட்ட நகலையும், விவரங்களையும், திட்டங்களை அமுலாக்கும் விதங்களையும், அதில் ஊராட்சி ஒன்றியங்கள் பற்றியும் தீவிரமாக விவாதித்தனர். கருத்துக்கள் பரிமாறப்பட்டன. விளக்கங்கள் தரப்பட்டன. முடிவெடுக்கப்பட்ட தீர்மானங்கள் அரசினரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும்.

'திட்ட வேலைகளில் மக்களின் ஆர்வம் பொங்கி எழும் புதுவெள்ளம் போல் திரண்டெழுகின்றது' என்பதை எடுத்துக் காட்டுவதுபோல் குழுமியிருந்த மக்கள் பிரதிநிதிகளின் விவாதங்கள் அமைந்திருந்தன. சிறப்பாக திட்டங்கள் அமுலாக மக்களின் ஒத்துழைப்பு மேலும் மேலும் கிடைக்கும் என்பதற்கான நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன. நிச்சயமாக எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும்; திட்டங்கள் வெற்றிக்குமேல் வெற்றிகளைக் கொட்டும்; நம் குறிக்கோள் அத்தனையும் நிறைவேறும் என்பதை இக் கருத்தரங்கம் எடுத்துக்காட்டிற்று.

மூன்றும் நாள்—29—9—1965
பரிசளிப்பு விழா

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்பு மிகும் நம் மாநில முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் கால் நடை பராமரிப்புத் துறையின் சாதனைகளை வெகு வாய் பாராட்டிப் பேசினார்கள். உணவு உற்பத்தி வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ள இவ்விலாகாவானது நேரிடையாக யுத்த நிதியும் திரட்டி சுமார் 1,901 ரூபாய் களை அளித்தபோது நம் முதல்வர் அவர்கள் பெரு மகிழ்ச்சியுடன் பெற்று வாழ்த்துக்கள் கூறினர்.

கோழி வளர்ப்பவரிடம் பெற்ற முட்டைகளை நம் இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு உள்துறை அமைச்சர் கனம் திரு பி. கக்கன் அவர்கள் வழங்கினார்கள்.

கால்நடை வளர்ப்பில் மக்களுக்கு ஆர்வத்தினையும், ஊக்கத்தினையும் ஊட்டவும், சிறந்த முறையில் கால்நடைகளை அவர்கள் பேண வேண்டும் என்பதற்காகவும் நடத்தப்பட்ட சிறந்த கால்நடை போட்டியில் வெற்றி பெற்ற கால்நடைகளின் சொந்தக்காரர்களுக்கு நம் உணவு அமைச்சர் திரு வெ. இராமையா அவர்கள் பரிசு வழங்கினார். கூட்டுறவுத் துறை அமைச்சர் கனம் திரு மன்றுடியார் அவர்கள் நெல்லூர் செம்மறி கிடாக்கள் வழங்கி, சிறப்புப் பரிசும் கொடுத்தார்கள். உயர்ஜாதிச் சேவல்களை வழங்கி சிறந்த கோழிக்கான பரிசை நம் மாநில சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் வழங்கினார்கள். செய்தித்துறை அமைச்சர் கனம் திரு கோ. பூவராகன் அவர்கள் பசும்புல் வளர்ப்புக்கு மான்யம் வழங்கினார்கள். மத்திய அரசினரின் பிரதிநிதிபோல் இவ்விழாவில் கலந்து, விழாவிற்கே தனிச் சிறப்பினைத் தேடித்தந்த டாக்டர் பட்டாச்சாரியா, மத்திய கால்நடைத்துறை நிர்வாகத் தலைவர் அவர்கள் சிறப்பு மலரை வெளியிட்டு சிறப்பு செய்தார்கள்.

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர் திரு மதன்ராஜ் அவர்கள் நன்றி நவில, நாட்டுப்பண்பாடி கருத்தரங்கம் கலைந்து சென்றது.

இதுபோன்ற கருத்தரங்கம் பல நடைபெறவேண்டும். மக்கள் திட்டங்கள் பற்றி தெளிவுபெற வேண்டும். நாளும், நாளும் திட்டங்கள் வளர்ச்சி அடைய வேண்டும், நாட்டு மக்களின் உணவுப் பற்றுக்குறை நீங்குவதுடன் மக்களது அன்றுட உணவு சத்து மிகுந்ததாக இருக்க வேண்டும். அதனால் பாரதநாட்டு மக்கள் பலனடைந்து நெடுநாள் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதே அரசினரின் பேரவா.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி செய்ய, முருங்கை மரத்திலிருந்தே பதியன்களை உற்பத்தி செய்யும் முறையை கோவை விவசாயக் கல்லூரி பரிசோதனை செய்தது.

மேற்குறிப்பிட்ட பரிசோதனையில், 2 அங்குலம் முதல் 3 அங்குலம் பருமனுள்ள கொம்புகளை முருங்கை மரத்திலேயே தேர்ந்தெடுத்து, அக் கொம்புகளில் ஒரு சென்டிமீட்டர் அகலத்திற்கு பட்டையை கொம்பை சுற்றிலும் எடுத்துவிட வேண்டும். பட்டை உரித்த இடத்தில், செரடிக்ஸ் பி. 2 (Seradix B. 2) என்ற மருந்தை பூச வேண்டும். இந்த மருந்து பூசின இடத்தை ஈர மண்ணுல் மூட வேண்டும். இந்த ஈர மண் கீழே விழுந்து விடாமல் இருப்பதற்கு 200 காஜ் (200 Gauge) நீண்ட சதுர பாலிதீன் காகிதத்தை (Polythene) கொம்பில் மண் வைக்கப்பட்ட இடத்தின் மேல்சுற்றி, இரு ஓரங்களிலும் மண் நழுவி விழாதபடி மெல்லிய கயிற்றைக் கொண்டு கட்டிவிடவேண்டும்.

இவ்விதம் செய்யப்பட்ட கொம்புகளில், மண் வைத்த இடத்தில் ஏராளமான வேர்கள் உற்பத்தியாகி ஒரே மாதத்தில் வேரோடு கூடிய கொம்புகள் வெட்டி நடுவதற்கு தயாராக இருந்தது. செரடிக்ஸ் பி. 2 என்ற மருந்தை பூசாமல், வெறும் மண்ணை மட்டும் வைத்த கொம்புகளிலும் வேர் பிடித்தது. ஆனல், இக் கொம்புகளில் செரடிக்ஸ் மருந்தை தடவின கொம்புகளைக் காட்டிலும் குறைந்த வேர்களே பிடித்தது. ஆகவே, செரடிக்ஸ் தடவுவது சிறந்தது. விரைவில் முருங்கை உற்பத்தி செய்ய இது ஒரு நல்ல முறை. செரடிக்ஸ் பி. 2 (Seradix B. 2) என்ற மருந்தின் உற்பத்தியாளர்கள் விலாசம் மே அண்டு பேக்கர், பம்பாய் (M/s. May and Baker Bombay.)



கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம் கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3 என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

எஸ். கிருஷ்ண கோனர், தூத்துக்குடி,
திருநெல்வேலி மாவட்டம்.

கே: கோழிக்கூடு வாழையின் மகசூலை அதிகமாக உயர்த்துவதற்கு உபயோகிக்க வேண்டிய வழிகளையும், என்ன உரம் உபயோகப்படுத்த வேண்டுமென்ற விபரத்தையும், விபரமாக தெரிவிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ப: நஞ்சையில் பயிரிடும் கோழிக்கோடு வகை ரஸ்த்தாளி வாழையின் மகசூலை அதிகரிப்பதற்கான நவீன சாகுபடி குறிப்புகள்:—

1. வாழைக்கன்றுகளை மாசி–பங்குனியில் நடவும்.
2. ஆவணி மாதத்தில் கீழ்க்கண்டபடி உரமிடவும்.

(அ)	கடலை புண்ணக்கு	350 கிலோ
(ஆ)	அம்மோனியம் சல்பேட்	250 கிலோ
(இ)	சூபர்	400 கிலோ
(ஈ)	பொட்டாஷ்	250 கிலோ

மேற்கண்ட உரங்களை நன்றாகக் கலக்கவும். இக்கலவையை செடி ஒன்றுக்கு 1.25 கிலோ வீதம் செடியைச் சுற்றிலும் செடியிலிருந்து 3 அடி தூரத்தில் பரவலாக வைத்துப் பின்னர் நீர்ப்பாய்ச்சவும்.

புரட்டாசி மாதத்திலாவது அல்லது ஐப்பசி முதல் வாரத்திலாவது (நல்ல மழைக்கு முன்பு) கீழ்க்கண்ட உரங்களை இரண்டாவது முறையாக வைக்கவும்.

(அ)	கடலை பிண்ணக்கு	150 கிலோ
(ஆ)	அம்மோனியம் சல்பேட்	125 கிலோ
(இ)	சூபர்	250 கிலோ
(ஈ)	பொட்டாஷ்	250 கிலோ

செடியொன்றுக்கு 0·850 கிலோ வீதம் மேற்கண்ட உரக்கலவையிட்டு நீர்ப்பாய்ச்சவும்.

3. தாய்ச் செடி பூப்பூத்ததற்குப் பிறகு ஒரே ஒரு பக்க கன்றை மட்டும் வளர விடவும்.

4. போதுமான நீர்ப்பாசனம், மற்றும் வடிகால் வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

5. நிலம் சுத்தமாகவும் களைகளின்றியும் வைக்கப்பட வேண்டும்.

டி. வித்யாசேகர பாண்டியன், மந்தித் தோப்பு அஞ்சல், கோவில்பட்டி.

கே.—பிலிப்பைன் வகை பப்பாளி நட்ட எப்போதிருந்து பலன் தர ஆரம்பிக்கிறது? மரத்தின் சராசரி உயரமென்ன? பழத்தின் சராசரி எடையென்ன ?

ப.—பிலிப்பைன் வகைப் பப்பாளி, நட்ட 6—7 மாதங்களில் பலன் தருகிறது. இரு வருட வயதான மரத்தின் சராசரி உயரம் 10—12 அடி. ஒரு பழத்தின் சராசரி எடை 3—4 ராத்தல்.

ஆணையாளர் பஞ்சாயத்து யூனியன், வாலாஜா.

கே.—நிலக்கடலையின் விளைச்சலை அதிகப்படுத்தவும், நிலத்தில் தழைச் சத்தை அதிகரிக்கவும் நிலக்கடலை விதையை விதைக்குமுன் பாக்டீரியாவுடன் கலந்து விதைக்கவேண்டுமென சிபாரிசு செய்கிறேன். ஆனால் விதைமூலம் பரவும் நோய்களைத் தடுக்க, பாக்டீரியாவுடன் கலந்த விதையை அக்ரஸான் மருந்துடனும் கலந்து விதைக்கவேண்டும். ஆகவே பாக்டீரியாவுடன் கலந்த விதையை அக்ரசான் அல்லது செரஸான் போன்ற மருந்துகளுடன் கலப்பது சரியா? நல்லதா? என்பதை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ப.—அக்ரசான், செரஸான் போன்ற மருந்துகள் விதையுடன் கலந்த பாக்டீரியாக்களுக்கு நிச்சயமாக தீங்கு விளைவிக்கிறபடியால் பாக்டீரியாவுடன் கலந்த விதைகளை இம்மருந்துகளுடன் நேரிடையாகக் கலக்கக்கூடாது.

முதலில் பாக்டீரியா கலவயை மரத்தூள் அல்லது மணலுடன் கலந்து அதன் பின் அக்ரசான் அல்லது செரஸான் மருந்துடன் கலந்த விதைகளுடன் கலந்தால், அக்ரஸான் அல்லது செரஸான் மருந்துகளினால் பாக்டீரியாக்களுக்கு உண்டாகும் தீங்கை ஓரளவு குறைக்கலாம்.

ஸீம்லெஸ் !

குழாய்க்
கிணற்றுப்
பாசனத்தில்
தொல்லைகள்
பலவற்றைத்
தவிர்க்கிறது

கிணறுகளுக்கான ஸீம்லெஸ் உறைக் குழாய்களை இந்தியன் ட்யூப் கம்பெனி இப்போது மிகக் குறுகிய காலத்தில் பட்டுவாடா செய்கிறது. ஸீம்லெஸ் கப்ளர்களுடன் கூடியவையாய் வரும் இக் குழாய்கள் $4\frac{1}{2}$" முதல் $6\frac{5}{8}$" ஓ.டி. வரையிலான (or வரையிலான உட்புறக் குறுக்களவுகளில்) கிடைக்கின்றன. இணைப்புப் பகுதிகளெல்லாம் ஏபிஐ குறித்துள்ள முறையில் திருகப்படுகின்றன; ஆகவே, அதிக அழுத்த நிலையிலும்கூட இவை தொல்லையே தராமல் உழைக்கின்றன,

ஒழுக இடமின்றி இணைப்புப் பகுதிகள் இருப்பதாலும், ஒட்டுத்தடமேதுமின்றி ஒரே சீரான ஸீம்லெஸ் முறையில் குழாய்கள் அமைந்துள்ளதாலும் பற்ற வைக்கத் தேவையேயில்லை; பொத்தல் விழுவது மட்டுமின்றி குழாய்களை இறக்கியபின் துரிதமாகத் துருப்பிடித்து நலியக்கூடிய பலவீனமான பகுதிகளும் இதனால் தவிர்க்கப்பட்டு விடுகின்றன. குழாய்ச் சுவர் கூடுதலான கனம் கொண்டதாக இருப்பதால் நீடித்த உழைப்பும் நிச்சயமாகக் கிட்டுகிறது.

ஸீம்லெஸ் குழாய்கள்—உரிய வேலைக்கென்றே உருவாக்கப்படுபவை,
உறுதியாக நெடுங்காலம் உழைப்பவை

இந்தியன் ட்யூப்

இந்தியன் ட்யூப் கம்பெனி லிமிடெட்
டாடா-ஸ்டீவர்ட்ஸ்:லாயிட்ஸ் கூட்டுநிறுவனம்
கல்கத்தா பம்பாய் புது டில்லி சென்னை அமதாபாத்

ITC-83 TM

வி. ஆர். வெங்கடாசலம், கொங்காமடைத் தோட்டம், நாகதேவன்பாளையம் அஞ்சல், கோபிசெட்டிப் பாளையம்.

கே.—நமது நாட்டு விவசாயிகளுக்கு விவசாய காரியங்களுக்காக ரஷியாவிலிருந்து டிராக்டர்கள் (14 H.P.) இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதாக கேள்விப்பட்டேன். ஆனுல் மேல் விபரங்கள் தெரியவில்லை. ஆகையால் தயவு செய்து,

1. அதன் விலையென்ன?
2. அதனை எங்கு யாரிடமிருந்து எம்முறையில் (தவணை முறையிலா? அல்லது முழு ரொக்கமும் ஒரே தடவையில் செலுத்தியா?) பெற்றுக் கொள்ளலாம்.
3. அதன் இழுவைத் திறனும் வேகமும் என்ன?
4. அது என்ன எரிபொருளால் (டீசல் அல்லது பெட்ரோல்) இயங்குவது?
5. எத்தனை பிஸ்டன் கொண்டது? பிளேவீல் உண்டா?
6. இந்த டிராக்டரை ஓட்டுவதற்கு அரசாங்கத்தாரால் பயிற்சி ஏதாவது கொடுக்கப்படுகிறதா?
7. இதற்கு அரசாங்கத்திற்கு (குவார்டர்) வரி ஏதேனும் கட்டவேண்டியது உண்டாயின் எவ்வளவு போன்ற விபரங்களை அனுப்பி வைக்கவேண்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ப:—விலை ரூ. 5,000 லிருந்து 12,000–வரை உள்ளது.

2. தவணை முறையில் விவசாய இலாகா மூலம் வாங்கிக்கொள்ளலாம். அல்லது நேரிடையாக கம்பெனிக்கு பணம் கட்டி வாங்கிக்கொள்ளலாம்.

3. 14 H.P, 28 H.P. 40 H.P.

4. டீசல் எண்ணெய்.

5. 2 பிஸ்டன்கள்

6. அரசாங்கத்தாரால் பயிற்சி கொடுக்கப்படுவது இல்லை. கம்பெனியே பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்கிறது

7. விவசாய காரியங்களுக்கு காலாண்டு வரி கிடையாது. ரஷ்யன் டிராக்டர்கள் மெஸ்ஸர்ஸ் நேஷனல் என்ஜினீயரிங் கம்பெனி, சென்னை. ("National Engineering Company, Madras)" என்ற கம்பெனியாரால் விநியோகிக்கப்படுகிறது.

P. பழனிசாமி, பகவதிபாளையம், பொள்ளாச்சி வழி

கே.—இப்போது மஞ்சள் மார்க்கெட் ரொம்ப டல்லாக இருக்கிறது. இந்நிலையில் மஞ்சளை விற்ருல் விவசாயிக்கு நஷ்டம்தான் ஏற்படும். ஆகையால் எப்போது மஞ்சள் மார்க்கெட் ஏறும்? விரிவாகக் கூறுங்கள்?

ப.—கோவை மாவட்டத்தில் மஞ்சளுக்கு முக்கிய வியாபார ஸ்தலமாக உள்ளது ஈரோடு. இங்கு மஞ்சளுக்கு அதிகவிலை பெறக்கூடிய காலம் மார்ச்—ஏப்ரல். இக்காலத்தில் மார்க்கட்டுக்கு வரும் மஞ்சளில் 50% விற்பனையாகிறது.

1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ந் தேதி உடன் முடிவான வாரத்தில் மஞ்சள் விலை கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

1. விராலி மஞ்சள் 1 குண்டால் ரூ. 90–120,

2. உருண்டை மஞ்சள் 1 குண்டால் ரூ. 76—96·25,

1964-ம் வருடத்தில் இதே காலத்தில் மஞ்சள் விலை உயர்ந்திருந்தது. விராலி மஞ்சள் குண்டாலுக்கு ரூ. 170 வரையும் உருண்டை மஞ்சள் குண்டாலுக்கு ரூ. 137·50 வரையும் விலையிலிருந்தது. 1964-ம் வருடம் ஏப்ரல் ஆரம்பத்தில் விராலி மஞ்சள் குண்டாலுக்கு ரூ. 152 லிருந்து 179 வரையும் உருண்டை மஞ்சள் குண்டாலுக்கு ரூ. 80 லிருந்து 124 வரையும் விலையிருந்தது. 1965-ம் வருடம் ஏப்ரல் ஆரம்பத்தில் விராலி மஞ்சளுக்கு குண்டாலுக்கு விலை ரூ. 110 லிருந்து 138·75 வரையும் உருண்டை மஞ்சளுக்கு ரூ. 70 லிருந்து ரூ. 100 வரையும் இருந்தது.

வட இந்தியாவும் மைசூர், கேரளாவும் ஈரோட்டில் விற்பனையாகும் மஞ்சளுக்கு முக்கியமான இறக்குமதி ஸ்தலங்களாகும். இவ்வருடத்தில் நல்ல மஞ்சள விளைவும், வட இந்தியா பகுதிகளிலிருந்து குறைநத தேவையும் ஏற்பட்ட காரணத்தால் மஞ்சள் விலை குறைவாக உள்ளது.

எம். அருணுசலம் பகண்டை அஞ்சல், மேல்பட்டம் பாக்கம்.

கே.—நிலக்கடலைக்கு சில நுண்ணூட்டகங்கள் தெளிப்பதால் அதிகப்படியான மகசூல் கிடைக்கிறது என்ற கட்டுரையை 1 வருடத்திற்கு முன் "மேழிச் செல்வம்" பத்திரிகையில் பார்த்தேன். நுண்ணூட்டகங்கள் தெளிப்பது பற்றி முழுவிபரமும், அவைகள் கிடைக்குமிடம், விலை போன்ற விபரங்களையும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ப.—போரான், ஜிங்க், காப்பர், இரும்பு, மாலிப்டினம், மாங்கனீஸ், ஆகிய 6 நுண் ஊட்டகங்களில் (மேழிச்செல்வம் 1962 சித்திரை மலர்) போரான் நிலக்கடலையின் மகசூலை அதிகரிப்பதில் சக்தி வாய்ந்ததாக உள்ளது. மண் ஈரமாக இருக்கும்போது போரான் இடுவது நல்லது. போரான், போரிக் அமிலமாகவும் வெங்காரமாகவும் (Borax) கிடைக்கிறது. வெங்காரமிடுவதால் 16·5% அதிகமாகப் பூவெடுத்து அதிக மகசூல் கொடுக்கிறது.

ஏக்கருக்கு 15 ராத்தல் வெங்காரத்தை நிலக்கடலை விதைப்புக்கு முன் ஈர மண்ணில் இட வேண்டும். 15 ராத்தல் வெங்காரத்தின் விலை சுமார் ரூ. 15-00 ஆகும்.

எள்ளுச்செடியைத் தாக்கும் நோய்களும் அதன் தடுப்பு முறைகளும்

[கோ. கௌசல்யா, ச. பாஸ்கரன், சி. எஸ். கிருஷ்ண மூர்த்தி, பூசண இயற்பிரிவு, வேளாண் கல்லூரி, கோவை.]

இந்தியாவில் பயிரிடப்படுகின்ற எண்ணெய் வித்துக்களில் எள்ளுப்பயிர் முக்கியமானது. தமிழ்நாட்டில் இது மூன்று லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்படுகிறது. இலைப் புள்ளி, தண்டு அழுகல், வாடல் நோய், வேர் அழுகல், கருகல் நோய், சாம்பல் நோய் முதலிய பல நோய்களால் இப்பயிர் தாக்கப்படுகிறது. இந்நோய்களைத் தடுத்து, மகசூலை அதிகப்படுத்துவது விவசாயிகளின் முக்கிய கடமையாகும்.

இலைப்புள்ளி நோய் (Leaf spot)

இந்தப் பூசண நோயினால் எள்ளுச் செடியின் மகசூல் பத்து சதவிகிதம் குறைகிறது.

அறிகுறிகள்.—எள்ளுச்செடி பூக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் இந்நோய் தோன்றுகிறது. சிறிய இளம் பழுப்பு நிற புள்ளிகள் இலைகளின் இருபக்கங்களிலும் தோன்றுகின்றன. இந்த புள்ளிகள் ஆரம்பத்தில் வட்ட வடிவததில் இருக்கும். பின்பு இப்புள்ளிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து பெரிய வடிவமற்ற பகுதிகளாக மாறுகின்றன. பின்பு இப்புள்ளிகள் கருப்பு நிறமாக மாறுகின்றன. இந்நோயால் தாக்கப்பட்ட இலைகள் சீக்கிரம் உதிர்ந்து விடுகின்றன. அதனால் மகசூல் அதிக அளவில் குறைகிறது.

தடுப்பு முறைகள்—

(i) கந்தகத்தூளை தாக்கப்பட்ட செடிகளின் மீது தூவவேண்டும்.

(ii) தாமிரம் கலந்த கந்தகத்தூளும் இந்நோயைத் தடுக்க மிகச் சிறந்தது.

2. பைடாப்தோரா தண்டு அழுகல் நோய் (Phytophthora stem rot)

அறிகுறிகள்.—நீர்க்கசிவுள்ள கரும்புள்ளிகள் தரை மட்டத்திலுள்ள தண்டு பாகங்களில் முதலில் தோன்றுகின்றன. பிறகு இந்தப்புள்ளிகள் மேல்நோக்கி படருகின்றன. சில நாட்களில் தண்டின்மேல் கருப்பு நிறமுள்ள கோடுகள் காணப்படுகின்றன. செடிகளின் தண்டு பாகங்களிலும் கிளைகளிலும் இந்நோய் அதிகமாக



பரவி அதனுல் செடிகள் செத்து விடுகின்றன. இந்நோய் முக்கியமாக செடிகள் பூக்க ஆரம்பிக்கும் சமயங்களில் தாக்குகிறது. நோயால் தாக்கப்பட்ட செடிகளின் இலைகளில் நீர்க்கசிவுள்ள பகுதிகள் தோன்றி, படர்ந்து அதனுல் இலைகள் உதிர்ந்து விடுகின்றன. பூங்கொத்துகளின் மீதும் இத்தகைய அறிகுறிகள் காணப்படும். நோயால் தாக்கப்பட்ட செடிகளில் காய்கள் குறைவாகவும், காய்களில் சுருங்கிய விதைகளும் தோன்றுகின்றன.

தடுப்பு முறைகள்

(i) செடிகளைச்சுற்றி தண்ணீர் அதிகம் தேங்கி நிற்காமல் பார்த்துவர வேண்டும்.

(ii) இந்நோய் தாக்கப்பட்ட செடிகளைச்சுற்றி 0·1 தவிகித "வெட்செரசான்" (0·1% Wet Ceresan) அல்லது ஒரு சதவிகித போர்டோ கலவையை ஊற்ற வேண்டும்.

(iii) நல்ல காற்ரேட்டமுள்ள, தண்ணீர் தேங்காத இடங்களில் இச்செடிகளை பயிரிடுதல் வேண்டும்.

3. கரும்புள்ளி நோய் (Anthracrose)

அறிகுறிகள்.—இந்நோய் தாக்கப்பட்ட செடிகளின் ஒரு பக்கம் மாத்திரம் இளம் அல்லது மட்டபச்சை (**dirty green**) நிறமாக மாறுகிறது. அந்த இடங்களில் தோன்றுகின்ற இலைகள் வெளுத்துக் காணப்படுகின்றன. பின்பு தாக்கப்பட்ட பகுதிகள் கருப்பு நிறமாக மாறிவிடுகின்றன. சில மயங்களில் செடிகளின் தோல் வெடித்து, உள் பகுதிகள் வெளியே தெரிகின்றன. இந்நோயால் காய்பிடிப்பது மிகவும் பாதிக்கப்படுகிறது. நோயால் தாக்கப்பட்ட செடிகள் காய்கள் தோன்றுவதற்கு முன்னுல் செத்து விடுகின்றன.

தடுப்பு முறைகள்—

(i) ஒரு சதவிகித போர்டோ கலவையை தாக்கப்பட்ட செடிகளின் மேல் தெளிக்க வேண்டும்.

(ii) காலம் கடந்து பயிர்டாமல், தக்க பருவ காலங்களில் பயிரிடவேண்டும்.

(iii) நோய் அணுகா (Disease resistent) தன்மையுள்ள செடி ரகங்களைப் பயிரிடவேண்டும்.

(iv) இரண்டு வருடம் அல்லது மூன்று வருட பயிர் மாற்றம் மிகவும் சிறந்தது.

4. வாடல் நோய் (Wilt)

அறிகுறிகள்.—நோயால் தாக்கப்பட்ட செடிகளின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, கீழ்நோக்கி தொங்கி பின் உதிர்ந்து விடுகின்றன. செடிகளின் மேல் பாகங்கள் வாடி வளைந்து விடுகின்றன. பழுப்பு நிறம் கீழிருந்து மேல்நோக்கி படருகின்றது. பின்பு செடிகள் பட்டுவிடுகின்றன.

தடுப்பு முறைகள்—

(i) நோயால் தாக்கப்படாத செடிகளிலிருந்து விதை எடுத்துப் பயிரிடவேண்டும்.

(ii) நோய் அணுகாத செடிரகங்களைப் பயிரிடவேண்டும்.

(iii) விதைகளை அக்ரசான் ஜி. என் (Agrasan G-N) என்ற மருந்தில் தோய்த்துப்பின் விதைக்கவேண்டும்.

5. வேர், தண்டு அழுகல் நோய் (Root and stem rot)

இந்நோய் இருவித பூசனங்களால் (Macrophomina phaseoli), (Rhizoctori abaṭaticola) உண்டாகிறது.

அறிகுறிகள்:— தாக்கப்பட்ட செடிகளின் தண்டுப் பாகம் கருப்பு நிறமாக இருக்கும். செடிகள் தரை மட்டத்தில் ஒடிந்து விழுந்துவிடுகின்றன. தண்டுப்பகுதிகளில் கருநிற புள்ளிகள் அதிகமாகக் காணப்படும். இந்நோயால் தாக்கப்பட்ட செடிகளின் காய்கள் முதிர்ச்சி அடைவதற்கு முன்னுல் வெடித்துவிடுகின்றன. விதைகளும் இந்நோயால் தாக்கப்பட்டு சுருங்கிவிடுகின்றன.

தடுப்பு முறைகள்—

(i) இந்நோய் விதைகளின் மூலமாக பரவுவதால், நோயால் தாக்கப்படாத செடிகளிலிருந்து விதைகளை எடுத்துப் பயிரிடவேண்டும்.

(ii) எள்ளுச்செடியை ஒரே நிலத்தில் பல தடவை பயிரிடாமல், மாற்றுப்பயிர்களைப் பயிரிடவேண்டும்.

(iii) விதைகளை அக்ரசான், செரசான் போன்ற பாதரசம் கலந்த மருந்துகளில் தோய்த்து விதைக்க வேண்டும்.



6. சாம்பல் நோய் (Powdery Mildew)

அறிகுறிகள்:— சாம்பல் அல்லது வெள்ளை நிற புள்ளிகள் இலைகளின் மேல் தோன்றுகின்றன. இந்த புள்ளிகள் விரைவில் பெரிதாகி இலைப்பரப்பு முழுவதும் பூசண இழைகளாலும் வெண்மை நிற பொடியாலும் மூடப்பட்டிருக்கும். புதிதாக தோன்றுகின்ற இலைகளும் இந்நோயால் தாக்கப்படுகின்றன. தாக்கப்பட்ட இலைகள் விரைவில் உதிர்ந்துவிடுகின்றன.

'மாருத்' சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயமுத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்.
(No. C-1, 40404/64—21-4-64.)



குணங்கள் :

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தட்டினால் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c. m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



மாருத் சார்ஜ் பம்ப்
ரூ. 280

'மாருத்'
நீடித்த அழுத்த சக்தியோடு
முதுகில் சுமந்து செல்லக்
கூடிய ஸ்ப்ரேயர்.

18 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 290
பித்தளையினால் செய்யப்பட்டது
ரூ. 230

14 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 280
பித்தளையினால் செய்யப்பட்டது
ரூ. 230



தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
தபால் பெட்டி எண் 539
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், பெங்களூர்-2.

தடுப்பு முறைகள்—

(i) கந்தகத்தூளை தாக்கப்பட்ட செடிகளின் மீது தூவுதல் நல்ல பலனைத்தரும்.

(ii) ஒரு சதவிகித போர்டோ கலவையை செடிகளின் மீது தெளிப்பதும் மிகச்சிறந்தது.

7. பாக்டீரியாவினால் உண்டாகும் கருகல் நோய் (Bacterial blight)

அறிகுறிகள்.—இந்நோய் இலைகளையும், தண்டுபாகங்களையும் அதிகமாகத் தாக்குகிறது. ஆரம்பத்தில் இலைகளின் மேல் நீர்க்கசிவுள்ள சிறிய வட்டவடிவமுள்ள புள்ளிகள் தோன்றுகின்றன. இப்புள்ளிகள் இளம் பழுப்பு நிறமாக இருக்கும். பின்பு இப்புள்ளிகள் கருப்பு நிறமாக மாறி, அளவில் பெரிதாகி, வடிவமற்ற பகுதிகளாக மாறிவிடுகின்றன. இப்புள்ளிகளிலிருந்து ஒரு வகைநீர் கசிந்துகொண்டிருக்கும். இவ்விதம் தாக்கப்பட்ட இலைகள் வாடி, காய்ந்து பின் உதிர்ந்துவிடுகின்றன.

தண்டு பகுதிகளில் இந்நோய் தாக்கினால் அவைகள் ஆரம்பத்தில் இளம் பழுப்பு நிறமாகவும், பிறகு படிப்படியாக அடர்பழுப்பு நிறமாகவும் முடிவில் கருப்பு நிறமாகவும் மாறிவிடுகின்றன. தாக்கப்பட்ட செடிகளின் தண்டு பகுதிகளில் தேன்துளி போன்ற ஒருவகை திராவகம் (Bacterial ooze) காணப்படும். இவ்விதம் தாக்கப்பட்ட செடிகள் சீக்கிரம் செத்துவிடுகின்றன.

தடுப்பு முறைகள்—

(i) தண்ணீர் தேக்கமில்லாத இடங்களில் எள்ளுச் செடிகளைப் பயிரிடவேண்டும்.

(ii) ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் (Streptomycin sulphate) என்னும் மருந்து தெளித்து இந்நோயை கட்டுப்படுத்தலாம்.

8. பாக்டீரியாவினால் உண்டாகும் அழுகல் நோய் (Bacterial Black rot)

அறிகுறிகள்.— செடிகளின் எல்லா பருவங்களிலும் இந்நோய் தாக்கும். இந்நோய் இலைக் காம்புகளின் வழியாக இலைகளில் பரவி, கோணவடிவமுள்ள, கருப்பு விளிம்புள்ள பழுப்புநிற புள்ளிகள் இலைநரம்புகளில் தோன்றுகின்றன. தாக்கப்பட்ட இலைகள் சீக்கிரம் உதிர்ந்துவிடுகின்றன. பின் செடி முழுவதுமே வாடி விடுகிறது.

தடுப்பு முறைகள்—

(i) நோய் அணுகா (Disease resistent) செடி ரகங்களைப் பயிரிடவேண்டும்.

(ii) ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் என்னும் மருந்து தெளித்து இந்நோயை கட்டுபடுத்தவும்.

தீவிர உரத்திட்டத்தின் கீழ் குறுகிய காலக் கடன்

தீவிர உரத் திட்டத்தின் கீழ், கலவை 1-க்கு விஸ்தரிக்கப்பட்ட குறுகிய காலக் கடன் வசதிகள் நெல், கரும்பு, ராகி, சோளம், மக்காச்சோளம் ஆகியவற்றுடன் கம்புக்கும் பொருந்தும் என அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது. தீவிர உரத்திட்டத்தின் கீழ் சோளம், கம்பு, ராகி முதலிய பாசனப் பயிர்ச் சாகுபடி ஒவ்வொன்றுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60 அதிகபட்சக் கடன் தரப்படும்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கம்பு, சோளம் ஆகிய பயிர்களும் இப்பருவத்தில் சாகுபடி செய்யப்படுகின்றன. நான் முன்னமே குறிப்பிட்டபடி இப்பயிர்களின் விளைச்சலை இரண்டு மடங்காகப் பெருக்க வீரிய சோளமான சி.எஸ்.எச். 1 சோளத்தையும், ஹெச். பி. 1 கம்பையும் சாகுபடி செய்யவேண்டும். இவ்வீரிய விதைகள் விவசாயிகளுக்கு தேசீய விதை உற்பத்தி ஸ்தாபனம் மூலம் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவைகள் 80-90 நாட்கள் அறுவடையாகி அதிக வருமானத்தைத் தருகின்றன. இந்த குறுகியகாலத்தில் ஏக்கருக்கு ரூபாய் ஆயிரம் வரை லாபம் பெறமுடியும். இவ்வீரிய ஒட்டுப்பயிர் வகைகளை சாகுபடிசெய்யும்போது முக்கியமான உரமிடும் முறையை அறிந்து அதிக உரமிட வேண்டும். இப்பயிர்களுக்கு சிபாரிசு செய்யப்படும் முறைகளை முற்றும் கடைப்பிடிக்காவிட்டால் விளைச்சல் குறையும். ஆகவே வீரிய ரகங்களைச் சிறப்பாகச் சாகுபடி செய்ய தகுந்த முறைகளைத் தெரிந்து கடைப்பிடித்து விளைச்சலும் அதனால் அதிக லாபமும் எல்லா விவசாயிகளும் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், விவசாயிகளுடைய உற்சாகத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களுக்குப் பல சலுகைகளும் கடன்களும் வழங்கப்படுகின்றன. நெல் சாகுபடிக்கு வேண்டிய கடன் வசதியும், பயிர்களுக்கு மருந்தடிக்க சகாய விலையில் மருந்துகளும் கருவிகளும் எல்லோரும் பெற்றுப் பயன் பெற வேண்டும்.

நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க கிணறுகள் தோண்டவும், குழாய் கிணறுகள் அமைக்கவும் அரசாங்கம் கடன் வசதிகள் அளிக்கிறது. அவரவர்கள் இடத்திற்கேற்ப கிணறு அல்லது குழாய் கிணறுகள் அமைத்து பாசன வசதியைப் பெருக்கி உற்பத்தியைப் பெருக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

போர்முனையில் வெற்றிபெற ஏர்முனையில் உற்பத்தியைப் பெருக்கும் கடமை விவசாயிகளைச் சேர்ந்ததாகும். "படைபலத்தைப் பெருக்க பண்ணைகள்" என்று நமது பிரதமர் கூறியதற்கேற்ப விவசாயிகள் ஒவ்வொருவரும் உற்பத்தியைப் பெருக்குவதில் ஈடுபடவேண்டும். "உண்டி கொடுத்தார் உயிர்கொடுத்தாரே". ஆகவே உணவளிக்கும் உழவர்கள், உற்பத்திப்போரில் உணவு உற்பத்தியைப் பெருக்கி பெரும் வெற்றிக் காண வேண்டும். "பொருபடை வெற்றி உழுபடை சாலில்" என்ற முதுமொழிக்கேற்ப நமது போர் முனையின் வெற்றி விவசாயிகளைத்தான் பொறுத்து இருக்கிறது. இதனை நன்கு தெளிவுபட வலியுறுத்தி நமது பிரதமர் கூறிய "ஜெய் ஜவான்! ஜெய் கிஸான்" என்ற பெருமைக்குரிய பேரொலியை உங்களுக்கு நினைவு படுத்தி முடித்துக் கொள்கிறேன்.

வீரர் வாழ்க! உழவர் வாழ்க!!

டாடா பைஸன் மற்றும் ராலி
ஒரு பிரச்னையைத் தீர்க்கிறார்கள்!
நீண்ட மௌனத்தை முதலில் கலைத்தார் டாடா.
''நல்ல வளர்ச்சிக்கான அறிகுறிகள் இருக்கின்றன" என்றார் அவர்.
''சிறந்த வடிவழகு!'' என்று எழிலில் சொக்கினார் பைஸன்.
''கட்டான தேகவாகு'' என்றார் ராலி தம் போக்கில்.
''உண்மை!'' என்று அதை ஆமோதித்தார் டாடா.
''இந்த வளர்ச்சியில் நமக்கும் பங்கு உண்டு. ராலீஸ்
'மரம் மார்க்' உரங்கள் மேலும் சிறந்த காப்பிப் பயிர் வளர உதவுகிறது.
டாடா பைஸன் பூச்சி மருந்துகள் அமோகமான
விளைச்சல் தர அதைப் பாதுகாக்கிறது.''
காப்பிக்கொட்டை நாணிக்கோணிப் பேசிற்று:
''காப்பி ருசியாயிருப்பதற்கும் அது ஒரு காரணம்.''
TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES
டாடா பைஸன் ராலீஸ்
பயிர் அபிவிருத்திக்குப் பணி புரிகிறது!
SHBI-RF-87 TAM



வானொலிச் செய்திகள்

அன்புடையீர்,

உழவர் பெருமக்களுக்கு இன்று ஒரு சோதனை. நாட்டிலே உணவுப்பற்றுக்குறை; பருவமழை பருவத்திலே பொழியவில்லை; வெளிநாட்டிலிருந்து கிடைக்கக் கூடிய உணவுப் பொருள் உதவியில் தயக்கம்; எல்லையில் அந்நியர்களின் தாக்குதல். ஆனால் எல்லையில் எதிரிகளை விரட்டியடித்து வருகின்றனர் நமது ஜவான்கள். போர் முனையிலே நமக்கு வெற்றி. இந்த வெற்றி ஏர்முனையிலும் நிகழ வேண்டும். இது உழவர்கள் கையில்தான் இருக்கின்றது. ஆனால் இதனை எப்படி நீங்கள் செயல்படுத்த முடியும் என்பதற்கு நமது **வேளாண்மைத் துறை நெறியாளர் 4—12—65 அன்று நிகழ்த்திய வானொலி** உரையை கேட்டிருப்பீர்களென நினைக்கிறேன். அதனைக் கேட்ட நீங்கள் உங்களால் முடிந்த அளவில் என்ன செய்ய முடியுமோ அவற்றை செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் நெறியாளரது உரையைப் படித்து பயன்பெற இவ் விதழிலேயே முழு உரையும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நீங்கள் இதனை மறுமுறையும் வாசித்துப் பாருங்கள். இதனை பிறருக்கும், உங்கள் விவசாய நண்பர்களுக்கும் எடுத்துரையுங்கள். உடனடியாக செயலிலே இறங்குங்கள். வெற்றி நமதே. செயலிலே இறங்கி, சீரிய முறையில் விவசாயிகள் செய்யும் பொழுது, குறிப்புகள் பெற **திருச்சி வானொலியை இரவு 7—30 முதல் 8 மணி வரை கேட்கத் தவறாதீர்கள்.** உங்களுக்கு வேண்டிய தொழில் நுணுக்க ஆலோசனைகள் அவ்வப் பொழுது கிடைக்கும். ஆகவே, திருச்சி வானொலி நிகழ்ச்சிகளை இரவு 7—30 முதல் 8 மணி வரை கேட்பதை ஒரு பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

உங்கள் நலனை பெரிதும் விரும்பும்,
து. கணபதி,
வானொலி விவசாய அலுவலர்,
36/பி, மவுண்டரோடு, சென்னை—2.

சென்ற மாதத்தில் நீங்கள் கேட்ட நிகழ்ச்சிகளில் நினைவில் கொள்ள வேண்டியவை !

வாழை தீவிர சாகுபடியும் அதன் தீவிர சாகுபடி குறிப்புகளும்.

வாழையில், அதன் இலை, பூ, காய், பழம், உள்தண்டு, வெளிமட்டை ஆகிய எல்லாப் பாகங்களும் பயன்படுகின்றன. சென்னை மாநிலத்தில் சுமார் 70,000 எக்கர் நிலத்தில் சாகுபடி வாழை செய்யப்படுகிறது. வாழை சாகுபடியை விருத்தி செய்ய வடஆற்காடு, திருச்சி, மதுரை மாவட்டங்களின் சில வட்டாரங்களில் வாழை தீவிர சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத் திட்டத்தை அமுல் படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பிரத்தியேக அலுவலர்கள் வாழை சாகுபடியாளர்களை அணுகி பண்ணைத் திட்டங்களைத் தயாரிக்கிறார்கள். இந்த பண்ணைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு திருந்திய விவசாய முறைகளை கடைப்பிடிப்பதற்குத் தேவையான உரங்கள், பூச்சி பூசண மருந்துகள், பிற சாகுபடி செலவுகளுக்கான தொகை மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்க் மூலம் கடனாக வழங்கப்படுகிறது.

கன்றுகள் நடும்போது கன்று ஒன்றுக்கு ஒரு கூடை மாட்டெரு அல்லது கம்போஸ்ட் அடியுரமாக இடவேண்டும். வாழை தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் கலப்பு உரம் 8 எக்கர் ஒன்றுக்கு 500 கிலோ வீதம் வழங்கப்படுகிறது, கலப்பு உரத்தை கன்று நட்ட மூன்றாவது மாதத்தில் பாதியும், ஐந்தாவது மாதத்தில் பாதியும் வைப்பது சிறந்ததாகும். வாழைக்கு உரமிடும்போது தூரிலிருந்து 1—1½ அடி தள்ளி வட்டமாக இட்டு மண்ணினால் மூடி விட்டு தண்ணீர் விடுவதுதான் சிறந்த முறையாகும்.

வாழையில் வரும் இலைப்புள்ளி நோயைத் தடுக்க பூசண மருந்துகளையும், பூச்சிகளைக் கட்டுப்படுத்த 50 சத பி.எச்.சி யும் உபயோகிக்க வேண்டும். எக்கர் ஒன்றுக்கு ரூ. 500 கடனாக வழங்கப்படுகிறது. இந்தக் கடனை பயிரின் மகசூலுக்குப் பின் திரும்பச் செலுத்த வேண்டும். வாழை மகசூலை, வாழைப்பழ அபிவிருத்திக் கார்ப்பரேஷன் மூலமாக கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்யவும் வழி வகைகள் செய்யப்பட்டு வருகின்றன.

(1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் தேதியன்று திரு சி. இராமானுஜம், மாவட்ட விவசாய அலுவலர் அவர்களின் வானொலி உரைச் சுருக்கம்.)

வயல் எலிகளை எவ்வாறு ஒழிப்பது?

நெல் பயிருக்கு எலிகளினால் நாற்றங்காலிலிருந்து பயிர் அறுவடையாகும் வரை அதிக சேதம் ஏற்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் கறம்பெலி, புல்லெலி, சுண்டெலி முதலியவற்றால் சேதம் ஏற்படுகிறது. நீண்ட நாள் பயிரான சாம்பாவில்தான் எலிகளினால் சேதம் அதிக மேற்படுகிறது.

கறம்பெலி உள்வளைவுகள் அதிகம் கொண்ட நீளமான வளைகளில் வளர்ந்து நெற்கதிர்களை சேமித்து வைக்கின்றன. ஒரு தடவைக்கு 2 முதல் 18 குட்டிகள் வரை

போடுகின்றன. புல்லெலி ஒரு தடவைக்கு ஒன்று முதல் 12 குட்டிகள் வரை போடுகின்றன. சுண்டெலி உருவத்தில் சிறியதாக இருக்கும். ஒரு தடவைக்கு 3 முதல் 9 குட்டிகள் வரை போடுகின்றன.

அக்டோபர், பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வரப்புகளை வெட்டி எலிகளைப் பிடித்து அழிக்கலாம். தப்பைகளால் செய்யப்பட்ட கிட்டிகளை வயல்களில் வைத்தும் எலிகளைப் பிடிக்கலாம். எலிகள் உண்ணக்கூடிய ஆகாரத்தில் 'ஜிங் பாஸ்பைட்' 'பாரதியான்' போன்ற பாஷாணங்களைக் கலந்து வைத்தும் கொல்லலாம். விஷக் கலவை சேர்க்கும்போது 19 பாகம் ஆகாரத்திற்கு ஒரு பாகம் ஜிங் பாஸ்பைடும், 29 பாகம் ஆகாரத்திற்கு ஒரு பாகம் பாரதியானும் கலக்க வேண்டும். பிரகாசமான விளக்கு வெளிச்சத்தில் புல்லெலிகளை தடியால் அடித்துக் கொல்லலாம். வளைகள் கட்டி எலிகள் வசிக்காமலிருக்கும் பொருட்டு சிறிய வரப்புகள் போட வேண்டும். மேலும் எலிகளின் விரோதிகளான கீரி, காட்டுப் பூனை, சாரைப் பாம்பு, குள்ளநரி, ஆந்தை போன்றவை எலிகளை உண்டு அழிப்பதால், எலிகளின் இவ்விரோதிகளை நாம் அழித்துவிடக் கூடாது. இவ்வாறு பல தடுப்பு முறைகளை அனைவரும் ஒன்று சேர்ந்து அனுசரித்தால் எலிகளினால் ஏற்படும் சேதத்தை நிச்சயம் தவிர்க்கலாம்.

(1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ந் தேதியன்று ஆடுதுறை உதவி பூச்சியல் வல்லுனர் திரு ராமகிருஷ்ணன் அவர்களின் உரைச்சுருக்கம்.)

எம்.சி.யு. 2 எம்.சி.யு. 3 ரக பருத்தி சாகுபடி

''கம்போடியா'' ''உகண்டா'' பருத்திகளின் இனச் சேர்க்கையால் விளைந்தரகங்கள் 'மதராஸ் கம்போடியா உகண்டா'' எனப் பெயர்பெற்றன. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் சாகுபடி செய்வதற்கேற்ற எம்.சி.யு. 2 ஹெக்டருக்கு 1120 முதல் 1700 கிலோ வரை பருத்தி விளைச்சல் கொடுக்கக் கூடியது. வயது 6 மாதம். எம்.சி.யு, 3 கோவை, திருச்சி, சேலம் மாவட்டங்களில் பாசனப் பயிராகவும், மதுரையில் மானாவாரிப் பயிராகவும் சாகுபடி செய்ய சிறந்தது. 6½ மாதம் வயதுடைய இந்த ரகம் ஹெக்டருக்கு 1120 முதல் 1700 கிலோ பருத்தி விளைச்சல் தரவல்லது. பருத்தியில் அதிக மகசூல் பெற கீழ்க்கண்ட திருந்திய நவீன சாகுபடி முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

நிலத்தை 2 அல்லது 3 முறை நன்றாக உழவேண்டும். எம்.சி.யு. 3 ஐ புரட்டாசிப் பட்டத்திலும், எம்.சி.யு. 2 ஐ மாசிப்பட்டத்திலும் விதைக்க வேண்டும். ஹெக்டருக்கு 18 கிலோ விதைகளை 36 கிராம் ' அக்ரசான் ' அல்லது ' செரசான் ' மருந்துடன் கலக்கவேண்டும். பிறகு விதைகளை தண்ணீரில் கரைத்த சாணக் குழம்பில் துவட்டி, நிழலில் உலர வைத்து விதைக்கவேண்டும். விதைத்த 15—20 நாட்கள் கழிந்த பின்னர், குழிக்கு 2 செடிகள் வீதம் விட்டு, மற்றவைகளை களைந்தெறிய வேண்டும். நிலத்தில் களைகள் இல்லாமல் சுத்தமாக களையெடுக்க வேண்டும். செடிகள் பூ அரும்பும் தருணத்தில் 'ஜூனியர் ஹோ' என்ற இடையுழவுக் கருவியை ஓட்ட வேண்டும். பின்னர் நாட்டுக் கலப்பை ஓட்டி, அமோனியம் சல்பேட் உரம் போட்டு 'ரிட்ஜ் கலப்பை'யால் செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும்.

கடைசி உழவிற்கு முன் ஹெக்டருக்கு 20—30 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எருவும், 110 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 40 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷும் போட வேண்டும். 230 கிலோ அம்மோனியம் சல்பேட்டை சமமாகப் பிரித்து 40—45 நாட்களில் பாதியையும், பூ பூக்கும் போது மீதியையும் சால்களில் இட வேண்டும். பூ பூக்கும் வரை 15—20 நாட்களுக்கொரு முறையும், பூ பூத்த பின் காய்வெடிக்க ஆரம்பிக்கும் வரை 7—10 நாட்களுக்கொரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும். பூச்சி பூசணங்களால் ஏற்படும் சேதத்தைத் தடுக்க, விதைத்த 10—15 நாட்களிலிருந்து 100 மில்லிமீட்டர் எண்டிரினை 100 லிட்டர் தண்ணீரில் கலந்தும், பின்னர் 8—10 நாட்கள் கழித்து 100 மில்லி லிட்டர் பாரதியானை 200 லிட்டர் தண்ணீரிலும் கலந்து, 10 நாட்களுக்கொரு முறை எண்டிரினையும் பாரதியானையும் செடி பூக்க ஆரம்பிக்கும் வரை மாற்றி மாற்றி தெளிக்க வேண்டும். பிறகு பாரதியானையும், ஹெக்டருக்கு 24 கிலோ விகிதம் ' செவின்' தூளையும் 10—12 நாட்களுக்கொரு முறை காய் வெடிப்பு ஆரம்பமாகும் வரை மாற்றி மாற்றி அடிக்க வேண்டும். பூ விடுமுன் அடிக்கும் பாரதியானுடன் ஹெக்டருக்கு 3 கிலோவீதம் தாமிர பூசண மருந்தையும், பூத்த பின் பாரதியானுடன் 3 கிலோ டி.டி.டீ. 50 சதத்தையும் கலந்து தெளிக்க வேண்டும். காய்ந்த நல்ல பருத்தியையும், கெட்ட பருத்தியையும் தனித்தனியே பிரித்தெடுத்து நிழலில் உலர்த்தி பாங்கான இடத்தில் சேமித்து வைக்கவேண்டும்.

(1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ந் தேதியன்று கோவை உதவி பருத்தி நிபுணர் திரு. ப. மாரப்பன் அவர் தம் வானொலி உரையின் சுருக்கம்.)

தாளடி சாகுபடி நிரூபணங்கள்

விவசாயிகள் அனைவரும் திருந்திய சாகுபடி முறைகளைக் கையாண்டால் தாளடி நெற்பயிரில் மகசூலை அதிகரிக்க முடியும் என்று நிரூபிப்பதற்காக முழு நிரூபணங்கள் போடப்படுகின்றன. 50 சென்ட்டுக்கு குறையாமல் உள்ள நிலங்கள் விவசாயிகளின் வயல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு, 25 சென்ட் பரப்புள்ள 2 பாத்திகளாகப் பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பாத்தியைச் சுற்றிலும் தடுப்பு வரப்புகள் போடப்படுகின்றன. ஒரு பாத்தியில் தீவிர சாகுபடித்திட்ட செய் முறைகளும், மற்றொரு பாத்தியில் விவசாயியின் முறைகளும் கையாளப்படுகின்றன. விவசாயிகள் அனைவரும் இந்த நிரூபணங்களை நேரில் பார்த்து ஏற்படும் பலன்களை அனுபவ பூர்வமாக உணர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கீழ்க்கண்ட தீவிர சாகுபடி முறைகள் கையாளப்பட்டன.

நாற்றங்காலில், 1 கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் வீதம் கலந்து 25 சென்ட் நட 3 சென்ட் நாற்றங்காலில் 5 கிலோ விதை தூவப்பட்டது. தாளடிக்கு ஏற்ற கோ. 25, ஆடுதுறை 11 போன்ற பொறுக்கு விதைகள் உபயோகிக்கப்பட்டன. நாற்றுப் பறிக்க 10 நாட்களுக்கு முன் சென்டுக்கு ½ கிலோ வீதம் அமோனியம் சல்பேட் தூவப்பட்டது. பசுந்தழையுரம் 1150 கிலோவுக்கு குறைவாகக் கிடைத்த இடங்களில், அதற்குச் சமமான 35 கிலோ அமோனியம் சல்பேட், 46 கிலோ சூப்பர் பாஸ்பேட், 12 கிலோ பொட்டாஷ் உரங்கள், இரசாயன உர சிபாரிசு அளவுடன் சேர்த்து இடப்பட்டன. பசுந்தழை கிடைத்த இடங்களில் ஏக்கருக்கு 2300 கிலோ வீதம் இடப்பட்டது. நாற்றுகளை, வரிசைக்கு வரிசை 10 அங்குலமும், வரிசையில் 4 அங்குலம் இடைவெளிவிட்டு நடப்பட்டன. இடையுழவு கருவி கொண்டு நட்ட 20, 35, 50-ம் நாட்களில் இடையுழவு செய்யப்பட்டது. எஞ்சிய பாதி அளவு அமோனியம் சல்பேட்டை நட்ட 15-ம் நாளில் தூவப்பட்டது. தடுப்பு முறையாக நாற்று பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பும், நட்டபின் 15-ம் நாளிலும் கொண்டைக் கதிர் பருவத்திலுமாக 3 முறை மருந்தடிக்கப்பட்டது இம்முறைச் சாகுபடியால் சராசரி ஏக்கருக்கு 1452 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. இது, விவசாயிகளின் சராசரி விளைச்சலைக் காட்டிலும் 313 கிலோ அதிக விளைச்சலாகும்.

முழு நிரூபணங்கள் தவிர அதிக உர அளவு நிரூபணங்களும் போடப்பட்டன. லாபகரமான முறையில் அதிக அளவு உரமிட்டு அதிக மகசூல் பெற இந் நிரூபணங்கள் வழி காட்டின. இந்நிரூபணங்களில், விளைச்சல் சராசரி ஏக்கர் விளைச்சலான 1452 கிலோவைக் காட்டிலும் 298 கிலோ அதிகமாகக் கிடைத்தது. திருந்திய சாகுபடி முறைகளைப் பின்பற்றி திருவையாறு வட்டாரத்தில் ஏக்கருக்கு சராசரி 2213 கிலோ வரை அறுவடை செய்துள்ளனர். எனவே விவசாயிகள் அனைவரும் தாளடி நெற்பயிரில் தீவிர சாகுபடி முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

[1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ந் தேதி அன்று திரு எம். காசிவிஸ்வநாதன், வேளாண்மை வல்லுநர் (தீவிர விவசாய மாவட்டத்திட்டம்), தஞ்சாவூர் அவர்களின் வானொலி உரைச் சுருக்கம்.]

கமுகு சாகுபடி

கமுகு, கோவை, சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. மணல், களிமண் நிலங்கள் தவிர, நல்ல வடிகால் வசதியுள்ள மற்ற நிலங்களில் பயிரிடலாம். இளங்கன்றுகள் வளர நிழல் அவசியமானதால், வாழை, செஸ்பேனியா போன்ற மரங்களை முதலிலேயே நட்டு வளர்ந்தபின் பாக்கு கன்றுகளை நடலாம். தோட்டத்தைச் சுற்றிலும் தென்னையும் வேலியோரமாக கிளிரிசீடியாவும் நெருக்கமாக நடுவதால் வெயில், காற்று முதலியவைகளால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கலாம்.

8 அடி இடைவெளியில் 2½ அடி கனஅளவு குழிகள் வெட்ட வேண்டும். மேல் மண்ணுடன் கம்போஸ்ட் அல்லது தொழு உரம் கலந்து குழிகளை மூட வேண்டும், பொறுக்கு கன்றுகளை குழியின் மையத்தில் நடவேண்டும். நம் மாநிலத்தில் ஜூன் முதல் நவம்பர் வரை பாக்கு நட ஏற்ற காலமாகும். நட்டபின் களையெடுத்தல், கொத்துதல் முதலியவற்றை காலத்தில் செய்ய வேண்டும். பலன் தரும் மரங்களுக்கு ஒவ்வொரு வருடமும் மரத்துக்கு 30 ராத்தல் பசுந்தழை அல்லது கம்போஸ்ட், 3 ராத்தல் கலவை உரம் நெ. 3 இட வேண்டும். இளங்கன்றுக்கு இதில் பாதி அளவு இடலாம்.

கோடையில் இளங்கன்றுகளில் ' மைட் ' பூச்சிகளின் சேதத்தைத் தவிர்க்க 1 அவுன்ஸ் கரையும் கந்தகத்தை 2—3 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மாரி காலத்தில் 1 சத போர்டோ கலவை தெளிக்க வேண்டும். பெரிய மரங்களுக்கு மழை காலத்திற்கு முன்பும், மழைகாலங்களிலும் இருமுறை 1 சதபோர்டோ கலவை தெளிக்கவேண்டும். ' அடைப்புகாளான் ' நோயினால் பாதிக்கப்பட்ட மரங்களைச் சுற்றி குழிகள் தோண்டி கந்தகத்தூளை தூவி மூடவேண்டும். இதனால் அந்நோய் பரவுவதைத் தடுக்கலாம். மேற்கூறிய சாகுபடி முறைகளால் பாக்கின் தரமும் மகசூலும் உயரும்.

(1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் தேதி அன்று கோவை பாக்கு அபிவிருத்தி அலுவலர் திரு. எம். மகாலிங்கம் அவர்களின் வானொலி உரைச் சுருக்கம்.)

நீங்கள் கேட்கப் போகும் கிராம வனொலி மன்ற நிகழ்ச்சிகள்

(செவ்வாய், வெள்ளிக்கிழமை தோறும்

இரவு 7—30 லிருந்து 8 மணி வரை திருச்சி, சென்னை—ஏ. திருநெல்வேலி நிலையங்களில் கேட்கலாம்.)

7—1—1966

தீவிர எள் சாகுபடி	திரு ஆர். பட்டாபிராமன், பிரத்தியேக மாவட்ட விவசாய அலுவலர் (எள்), விழுப்புரம்.

11—1—1966

மாமரத்தைத் தாக்கும் பூச்சிகளும் அவற்றை தடுக்கும் முறைகளும்.	திரு. எஸ். எம். விட்டல். உதவி பூச்சியல் நிபுணர், திண்டிவனம்.

14—1—1966

தீவிர விவசாயப் பகுதி ஜில்லாக்களில் அவசர கால உணவு உற்பத்தி திட்டங்கள்	திரு. டி. எஸ். பிரான்விஸ், கூட்டு விவசாய நெறியாளர் சென்னை.

21—1—1966

மார்கழிப் பட்டத்திற்கு கோ. 7, கோ. 8, கேழ்வரகு ரகங்கள்.	திரு. ஜி. முத்தரசன், மாவட்ட விவசாய அலுவலர், வேலூர்

28—1—1966

நல்ல கரும்பு விதைக் கரணைகளே நடவுக்கு உகந்தது.	திரு. எம். வேலாயுதம், கரும்பு பெருக்க அலுவலர் கடலூர், தென்ஆற்காடு.

கூப்பர் டீசல் இன்ஜின்களின் பல்வேறு உபயோகங்கள்.

கூப்பர் டீசல் இன்ஜின்களை, அவை நீர் இறைப்பதற்கு உபயோகிக்கப்படாதபோது, மாவு அரைப்பது, எண்ணெய் எடுப்பது, மரம் அறுப்பதுபோன்ற மற்றும் இதர வேலைகளுக்குச் சுலபமாக உபயோகிக்க முடியும். விவசாயத்திற்கு இது மிகவும் உதவுகிறது.

இதர விசேஷ அம்சங்களாவன:

* வலுவானது மற்றும் சிக்கனமானது– இலேசான டீசல் எண்ணெயில் ஓடுகிறது.
* ஓட்டுவது சுலபம்.
* உபரி உறுப்புகள் ஏராளமாகக் கிடைக்கின்றன.
* "கூப்பரால் ஒப்பப்பட்ட" சேவை உடனேயே வினியோகஸ்தர்கள் மூலம் கிடைக்கிறது.
* நீர்ப்பாசனத்திற்குத் தவிர பலவிதங்களிலும் உபயோகப்படுகிறது.
* ஒரு வருட உத்திரவாதம்.

கூப்பர் CR 8, CR 14, CR 19, CR 26 மற்றும் CR 40 இன்ஜின்கள் 8 லிருந்து 40 BHP வரை தயாராகக் கிடைக்கின்றன.



கூப்பர்
டீசல் இன்ஜின்

இதை வைத்திருப்பவரிடம் இதைப்பற்றிக் கேளுங்கள்.

கூப்பர்
இன்ஜினீயரிங் லிட்.,

விற்பனைப் பகுதி :
டெக்கான் ஜிம்கானா,
பூனா–4, மஹாராஸ்டிரா.

CE. 828A TAM

கோகோ-ஒரு புதிய பணப்பயிர்.

(டி. ஏ. ஸ்ரீராம், கோகோ அபிவிருத்தி அலுவலர்.)

கோகோ இன்று நாடு முழுவதிலும் யாவரும் அறிந்த பானம். இது கோகோ செடியிலிருந்து தயாரிக்கப்படுவதால் இப்பெயர் பெற்றது. இந்தியாவின் பருவ நிலைகளில் லாபகரமாகப் பயிரிடக்கூடிய பணப் பயிர்களில் கோகோவும் ஒன்றாகும். இப்போது கோகோ உலகின் உஷ்ணப் பிரதேசப் பிராந்தியங்களில் அதிகமாகப் பயிராகி வருகிறது. ஆப்பிரிக்காவிலுள்ள பல நாடுகள் கோகோவை விளைவித்து வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்து வருகின்றன. சில நாடுகள் தங்கள் பொருளாதாரத்தில் கோகோ ஏற்றுமதி வருவாயைப் பெரிதும் நம்பியிருக்கின்றன. கோகோ விதைகளைப் பதப்படுத்தி உலர வைத்து அதிலிருந்து சாக்லேட், கோகோ பொடி முதலியவற்றைத் தயாரிக்கிறார்கள். கோகோ சாக்லேட்டும், கோகோ பானமும் கோகோவிலிருந்து தயாராகும் இதர பொருள்களும் உலகில் நாளுக்கு நாள் பிரபலமாகி வருகின்றன. மருந்து உற்பத்தித் தொழில்சாலைகளில்கூட கோகோவை மாத்திரைகளில் மேற்பூச்சுக்குப் பயன்படுத்துகிறார்கள். உலக நாடுகள் முழுவதிலும் ஆண்டுதோறும் 11,24,000 டன் கோகோ விதை உற்பத்தியாவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

பதினெட்டாம் நூற்றாண்டு இறுதியில்தான் கோகோ இந்தியாவில் அறிமுகமாயிற்று. அதனைப் பரீட்சார்த்தமாக இந்தியாவில் பயிரிடப்பட்டுப் பார்த்த போது இந்திய மண்ணில் அது நன்றாக வளரும் என்று தெரிந்தது. ஆனால் பயிரிடும் முறை, கோகோவைப் பக்குவம் செய்யும் விதங்கள் முதலானவை இங்கு பலருக்குத் தெரியாத காரணத்தால் சமீப காலம் வரை பெரிய அளவில் கோகோவைப் பயிர் செய்ய அதிகமானவர்கள் துணிந்து இறங்கவில்லை. இப்போது அந்த நிலை ஓரளவு மாறி வருகிறது என்று கூறலாம். கோகோப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நாட்டின் ஒருசில பகுதிகளில் தோன்றிப் பிரபலமடைந்து வருகின்றன. கோகோ உற்பத்திப் பொருள்கள் ஏராளமாக விற்பனையாகின்றன. இதனால் சென்னை, கேரளம், மைசூர், ஆந்திரா, ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், மகாராஷ்டிரா முதலான மாநிலங்களிலும், அந்தமான், நிகோபார் தீவுகளிலும் கோகோ பயிர் செய்யப்பட்டு வருகிறது. கோகோ பயிர் செய்பவர்களுக்கு கடன் வசதி, தொழில் நுணுக்க உதவி, கோகோ செடிகள் முதலானவற்றை வழங்கித் தாராளமாக உதவ மாநில அரசாங்கங்கள் முன்வந்துள்ளன.

கோகோவில் இரண்டு தனித்தனி ரகங்கள் இருக்கின்றன. உயர்ந்த ரக கோகோவின் காய்கள் பெரியதாக இருக்கும். வெள்ளை அல்லது இளஞ் சிவப்பு நிறத்தில் இளந் தளிர்கள் இருக்கும். பழுக்கும்போது சிவப்பு அல்லது மஞ்சள் நிறமாகக் காணப்படும்.

கோகோ செடி விதைப் பெருக்கம் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகிறது. உயர்ந்த ரக கோகோவுடன் முரட்டு ரக கோகோ இனத்தில் மகரந்தச் சேர்க்கை ஏற்பட்டு விடாதபடி தடுப்பது இப் பயிரில் மிக முக்கியமாகும். இதற்காக உயர்ந்த ரகங்கள் பயிரிடப்படும் பிராந்தியங்களில் மட்ட ரகங்கள் பயிரிடுவதில்லை. இப்படி ஆரம்பத்திலேயே இந்த எச்சரிக்கையை மேற்கொண்டு விட்டால் கோகோ விதைகளைப் பதப்படுத்துதல், தரம் பிரித்தல், விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளில் அதிகமான சிக்கல்கள் ஏற்படமாட்டா. சென்னை, கேரளம், மைசூர், மகாராஷ்டிரா முதலிய பிராந்தியங்களில் மட்டும் சிரயல்லோ என்ற உயர்ந்த ரக கோகோ பயிர் செய்யப்பட்டு வருகிறது. ஏனைய மாநிலங்களில் முரட்டு ரக கோகோ பயிராகிறது. ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், திரிபுரா, அந்தமான், நிகோபார் ஆகிய இடங்களிலெல்லாம் பரீட்சார்த்தமாக கோகோ பயிரிடப்பட்டு வருகிறது.

உஷ்ணப் பிரதேச மலைப் பிராந்தியங்களின் சீதோஷ்ண நிலை கோகோ பயிருக்கு மிக ஏற்றதாகும். வெறும் வரண்ட பிரதேசம் கோகோவுக்கு அவ்வளவு உதவாது. மிக அதிக மழை பெய்யும் பிரதேசத்திலும் கோகோ பயிரிடுவது சாத்தியமில்லை. ஒவ்வொரு மாதமும் சீரான மழை பெய்யக்கூடிய பிராந்தியங்கள் அல்லது எல்லா பருவத்திலும் பாசன வசதி கிடைக்கக் கூடிய பிராந்தியங்களில் கோகோவைப் பயிரிடலாம். ஈரப்பதம் சுமார் எண்பதும் ஆண்டு சராசரி அதிக அளவு உஷ்ணம் 24-25 சென்டிகிரேடும் குறைந்தபட்சம் 15 டிகிரி சென்டிகிரேடும் இருப்பது நல்லது. பலமான கடற் காற்றோ சூறாவளிக் காற்றோ அடிக்கக்கூடிய இடங்கள் பொருத்தமானவைகள் அல்ல. களி கலந்த செம்புறை மண்ணிலும் மணல் கலந்த செம்புறை மண்ணிலும் இப் பயிர் நன்றாக வளரும். தண்ணீர் மட்டம் மேல் மண்ணிலிருந்து 6 அல்லது 8 அடிக்கும் கீழாக இருக்க வேண்டும்.

முன்பெல்லாம் கோகோ பயிரை நிழல் உள்ள இடத்தில் விளைவித்து வந்தார்கள். ஆகையால் காடுகளைக் கோகோ பயிரிடத் தேர்ந்தெடுத்தார்கள். வளர்ந்த கோகோ பயிருக்கு நிழல் தேவையா என்பது இன்னும் சரிவர முடிவு செய்யப்படவில்லை. இருந்தாலும் ஆரம்பத்தில் சிறு செடிகளுக்கு நிழல் இருப்பது நல்லது என்பது மட்டும் உறுதியாகியிருக்கிறது.

காடுகள் இல்லாத இடங்களில் வாழைத் தோட்டங்களுக்கிடையிலும் கிளிரிசீடியா செடி நிழல்களிலும் கோகோ விதைகளை விதைத்து வளரச் செய்யலாம். வாழைமர நிழல் 2-3 வருட கோகோ பயிருக்கு மட்டிலும் பயன்படும். கிளிரிசீடியா அல்லது விரைவில் வளரக் கூடிய இதர நிழல் மரங்களை கோகோ செடிக்கு 8 அல்லது 9 மீட்டருக்கப்பால் வளர்த்து எப்போதும் பயிருக்கு நிழல் கொடுத்துக் கொண்டிருக்கும்படி செய்யலாம்.

கோகோ பயிரிடல் .—சாதாரணமாக விதைகளிலிருந்து தான் கோகோ செடி உண்டாக்கப்படும். நன்கு கனிந்த பழங்கள் அறுவடையானதும் அவற்றிலிருந்து விதைகள் சேகரிக்கப்படும். அப்படி எடுக்கப்பட்ட விதைகளை உடனடியாக சிறு சிறு தொட்டிகளில் விதைகளின் கூர்மையான பாகம் மேலே இருக்கும்படி விதைக்க வேண்டும். விதைகள் பழத்திலிருந்து வெளியெடுக்கப்பட்ட பத்து தினங்களுக்குள் முளைக்கும் தன்மையை இழந்து விடுவதால் எடுத்தவுடனேயே அவற்றை விதைத்துவிட வேண்டும். விதைக்கும் தொட்டியில் தோட்ட மண்ணையும் கம்போஸ்ட் உரத்தையும் மணலையும் கலந்து கொட்டி இத்தொட்டிகளை ஈரப்பதம் அதிகம் உள்ள நிழலான இடத்தில் வைக்க வேண்டும். தண்ணீர் மிதமாகத் தெளித்து வந்தால் போதுமானது. விதைத்து 6 முதல் 8 மாதங்களுக்குள் செடியானது சுமார் 50 சென்டி மீட்டர் உயரம் வளர்ந்து பறித்து நடுவதற்குத் தயாராகிவிடும்.

நடவும் பயிர் கண்காணிப்பும் .—கோகோ பயிரிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்படும் நிலத்தில் மூன்று நான்கு மாதங்கள் முன்பாகவே நிழலுக்கான செடிகளை திட்டமிட்டு வளர்க்கத் தொடங்க வேண்டும். காடுகளில் நடுவதானால் 2 மீட்டர் அகலமுள்ள நீண்ட இடைவெளியைத் தயாரித்துக் கொண்டால் போதும். 30 முதல் 50 சென்டி மீட்டர் ஆழமும் 0·09 சதுர மீட்டர் அல்லது 0·16 சதுர மீட்டர் பரப்புமுள்ள குழிகளை வெட்டி அவற்றுள் தழை உரம், எரு முதலானவற்றைப் போட்டுக் கொள்ள வேண்டும். தொட்டிகளிலுள்ள செடிகளை வேர்கள் கொஞ்சம்கூட சிதருதபடி பேர்த்தெடுக்க வேண்டும். வயல்களில் அவற்றை நட்டபிறகு செடிகளின்மேல் நல்ல நிழலிருக்கும்படி தட்டிகளை வைத்து ஏதாவது மறைவு உண்டாக்க வேண்டும். ஏற்கெனவே வயலில் நடப்பட்ட நிழல் செடிகள் போதிய அளவு நிழல் தரும்படி வளர்ந்திருந்தால் இந்த ஏற்பாடு தேவையில்லை. செடிகளைச் சுற்றி களைச் செடிகள் முளைத்து விடாதபடியும் மண்ணில் ஈரப்பதம் குறைந்துவிடாதபடியும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

உரமிடுதல் ·—இதுவரை சிறிய விவசாயிகளே கோகோ பயிரில் ஆர்வங்காட்டி வருவதால் உரமிடுதல் சம்பந்தமாக எந்தவித ஒழுங்கும் சரிவர நடைமுறையிலில்லை. அவர்களால் அதிகமான செலவு செய்து உரங்களை வாங்கிக் கொட்ட முடியாது. பொதுவாக 10:10:10 என்ற ரீதியில் நைட்ரேட், பாஸ்பரஸ் பொட்டாஷியம், என்ற மூன்றையும் கலந்து செடி ஒன்றுக்கு 0·12 கிலோ கிராம் வீதம் கொட்ட வேண்டும். அதையடுத்து அம்மோனியம் சல்பேட் தூவ வேண்டும். அடிக்கடி தழைச்சத்து, மாட்டெரு முதலானவற்றையும் கொட்டுவது செடிக்கு நல்ல உரந்தரும்.

கோகோ பயிர் நாலைந்து வருடம் வளர்ந்து பிறகு பயன் தர ஆரம்பிக்கும். பத்தாண்டுகளுக்குப் பின்பு தான் கோகோ செடியிலிருந்து நிறைந்த பலன் எதிர் பார்க்க முடியும். ஒவ்வொரு செடியும் 30 முதல் 40 வருஷங்கள் பலன் தரும். பூக்கள் தோன்றிய ஆறு மாதத்திற்குள் காய்கள் முற்றிப் பழுக்கும். பழங்களை சரியான பருவத்தில் அறுவடை செய்ய வேண்டும். காலந் தவறி அறுவடை செய்த பழங்களிலிருந்து கிடைக்கும் கோகோ உயர்ந்த ரகமாக இருக்காது. பழங்களைக் கத்தியைக் கொண்டு வெட்ட வேண்டுமே தவிர பலத்தால் இழுத்துப் பறிக்கக் கூடாது. அப்படிச் செய்தால் அடுத்துப் பூக்கள் தோன்றுமலே போய்விட வாய்ப்பு உண்டு.

கோகோ பழங்களைப் பறித்ததும் அவற்றைப் பதப் படுத்தி உலர வைத்து அதன் பின்பே விற்பனைக்கு அனுப்ப வேண்டும். இப்படிப் பதப்படுத்துவது சிரமமான வேலையில்லையென்றுலும் கவனமாகச் செய்ய வேண்டும்.

காய வைத்த கோகோ பழங்களை தூசி படாதபடியும் வெளி வாசனைகள் கலந்துவிடாதபடியும் அல்கதீன் பைகளில் போட்டு ஈரப்பதமில்லாததும் காற்றோட்டம் உள்ளதுமான இடத்தில் சேமித்துப் பாதுகாக்கவேண்டும்.

காடுகளில் கோகோ பயிரிடுவதற்கு ஹெக்டாரொன்றுக்கு சுமார் 700 ரூபாய் செலவாகுமென்றும் நிழல் செடிகள் உண்டாக்கிப் பயிரிடுவதற்கு சுமார் 900 ரூபாய் செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. பிறகு அவற்றின் பாதுகாப்புச் செலவு ஹெக்டாரொன்றுக்கு 300 முதல் 500 ரூ. வரை வரலாம். செடிகள் ஐந்து ஆண்டு வளர்ந்தபிறகு இச் செலவு ஆண்டில் சுமார் 700 ரூபாய் ஆகக்கூடும். இந்த தோராயமான மதிப்பீட்டில் இடத்திற்கிடம் சிறிது வேறுபாடுகள் வரலாம். ஹெக்டரொன்றுக்கு 2,000 கிலோ கிராம் மகசூல் கிடைக்கக்கூடும். ஆனால் சராசரி 1,000 கிலோ கிராம்தான் கிடைக்குமென்று வைத்துக் கணக்கிட்டாலும் அதன் மூலம் வருஷத்தில் 3,200 முதல் 5,500 ரூபாய் வரை வருவாய் கிடைக்கும். பத்தாண்டு செடிகள் வளர்ந்த பிறகு ஹெக்டாரொன்றில் குறைந்த பட்சம் ரூபாய் 2,200 முதல் அதிக பட்சம் ரூபாய் 4,500 வரை லாபம் கிடைக்கும். நாட்டில் கோகோவின் தேவை நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டு வருவதால் கோகோவை விற்பதற்கு அதிக சிரமம் இருக்காது.

கோகோ எளிதில் பயிரிடக் கூடியதாயிருப்பதாலும் கோகோவுக்காக இந்தியா செலவிடும் வெளிநாட்டுச் செலாவணியை மீட்டுத் தருவதாக இருப்பதால், ஓரளவு நல்ல லாபம் தரக்கூடிய பணப்பயிராக இருப்பதாலும் இந்திய விவசாயிகள் கோகோ பயிரிடுவதில் கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது.

கன்னியாகுமரி மாவட்டம் - கோடையார் பாசன வசதி

பேச்சிப்பாறை – பெருஞ்சாணி நீர்த்தேக்கங்கள் 1961 அக்டோபர் 26-ம் தேதியிலிருந்து பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளது. குறுகிய காலப் பயிருக்கு மட்டுமே தண்ணீர் சப்ளை அனுமதிக்கப்படும். நீர்த் தேக்கங்கள் 1966 மார்ச் மாதம் 1-ம் தேதி காலை 6 மணிக்கு மூடப்படும்.

1965-ம் ஆண்டு அக்டோபர் மாதக் கால நிலை அறிக்கை

[சி. பாலசுப்ரமணியன், பி.ஏ., பி.எஸ்ஸி. (அஜி.), ரா. சந்தானகிருஷ்ணன், எம்.எஸ்ஸி. (அஜி.),
விவசாயக் கால நிலை ஆய்வுப் பிரிவு, கோயமுத்தூர்-3.]

இம் மாதத்தில் முதல் தேதியன்று தமிழகத்தில் பரவலாக மழை பெய்தது. பிறகு 7-ந் தேதிவரை சிற்சில இடங்களில் மழை பெய்தது. ஆனால் 3-ந் தேதியன்று பொதுவாக வரட்சி நிலவியது. 8, 9, 10 தேதிகளில் பொதுவாக வரட்சி நிலவியது. 11-ம் தேதியிலிருந்து ஐந்து நாட்களுக்குத் தமிழகத்தின் சிற்சில இடங்களிலும் பரவலாகவும் மழையிருந்தது. 16-ம் தேதியிலிருந்து நான்கு நாட்களுக்கு தமிழ்நாடெங்கும் சற்று பரவலாக மழை பெய்தது. 20-ம் தேதியன்று இம்மாநிலத்தில் பரவலாக மழை பெய்தது. 21-ம் தேதியன்று பொதுவாக வரட்சி நிலவியது. 22-ம் தேதியிலிருந்து ஆறு நாட்களுக்கு தமிழ்நாட்டில் சிற்சில இடங்களிலும் பரவலாகவும் மழை பெய்தது. ஆனால் 25-ம் தேதியன்று மட்டும் சற்று பரவலாக மழை பெய்தது. 28-ம் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்கு பொதுவாக வரட்சி நிலவியது. இம் மாதத்தின் முடிவில் சிற்சில இடங்களில் மழை பெய்தது.

இம் மாதத்தில் பகல் வெப்பநிலையில் பெருத்த மாற்றங்கள் எதுவும் இல்லை.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்

செங்கல்பட்டு மாவட்டத்தில் இம்மாதம் போதிய மழையில்லை. காஞ்சீபுரம் பகுதியில் சம்பா நாற்றங்கால் தயாரிக்கவும், கடலை விதைப்புக்கும் காலநிலை உதவியது. திரூர் பகுதியில் போதிய மழையின்மையால் பயிர்கள் வாட்டமுற்றன. வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் போதிய மழையில்லை. பாலூர் பகுதியில் ராணிபேட்டை வட்டாரத்தில் போதிய மழையிருந்தது. இவ் வட்டாரத்தில் பெய்த மழை கடலை விதைப்புக்கும் சம்பா பயிர் நாற்றங்கால் விதைப்புக்கும் உதவியது. குடியாத்தம் பகுதியில் போதிய மழையின்மையால் வளரும் பயிர்கள், முக்கியமாக கரும்பு வாட்டமுற்றன. கரும்பு பயிரில் துளைப்பான்களும் "பைரில்லா" தத்துப் பூச்சியும் காணப்பட்டன. திண்டிவனம் பகுதியில் போதிய மழையின்மையால் கடலைப் பயிரின் மகசூல் குறைந்தது. சொற்ப அளவு சுருள்பூச்சி தாக்குதலும் இலைப்புள்ளி நோயும் கடலைப் பயிரில் காணப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் போதிய மழை பெய்யவில்லை. ஆடுதுறைப் பகுதியில் குறுவைப் பயிர் அறுவடைக்கு வந்தது. சிறிதளவு பெய்த மழை சம்பா பயிருக்கும் தாளடிப் பயிருக்கும் உதவியது. சம்பா பயிரில் நாவாய் பூச்சிகளும் இலைப்புள்ளி நோயும் காணப்பட்டன. பட்டுக்கோட்டை பகுதியில் போதிய மழையில்லை. இப்பகுதியில் கோ·25 நெற்பயிரில் இலைப்புள்ளி நோயும் தத்துப்பூச்சிகளும் காணப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் போதிய மழையிருந்தது. கரூர் பகுதியில் பெய்த மழை, நெல், சோளம், கம்பு, மிளகாய், மஞ்சள் போன்ற தோட்டப் பயிர்களுக்கு உதவியாய் இருந்தது. மற்றும் மானாவாரி MCU பருத்தியும் தாளடி நெற்பயிரும் விதைக்கப்பட்டன. மதுரை மாவட்டத்தில் மழை மிதமாக இருந்தது. காலநிலை விவசாயத்திற்கு எற்றதாக இருந்தது. இராமநாதபுரம் மாவட்டத்தில் போதிய மழையிருந்தது. இம்மாவட்டத்தில் பெய்த மழை வளரும் பயிர்களுக்கு உதவிற்று. நஞ்சை பயிர்கள் நடுவதற்கு வேண்டிய வேலைகள் தொடங்கப்பட்டன. சிவகங்கை பகுதியில் பெய்த மழை வளரும் நெல், கடலை, கரும்புப் பயிர்களுக்கு உதவியாயிருந்தது. மற்றும் பருத்தி நடவுக்கும் மிளகாய் நாற்றங்கால் நடவுக்கும் உதவிற்று. திருநெல்வேலி மாவட்டத்தில் சிறிதளவு மழையிருந்தது. சங்கரன்கோயில் பகுதியில் பெய்த மழை நெற்பயிர் நடுவதற்கு உகந்ததாயிருந்தது. பாளையங்கோட்டையில் அதிக மழையிருந்தது. அம்பாசமுத்திரத்தில் பெய்த மழை இரண்டாம்போக நெற்பயிர் நாற்றங்கால்கள் நடுவதறகு உதவியாயிருந்தது. ஆனால் நெல் விதைகள் காய்வதற்கும் வைக்கோல் உலர்வதற்கும் இம்மழை தடங்கலாயிருந்தது. கோவில்பட்டி வட்டாரத்தில் பெய்த மழை இங்கு சோளம் வளர்வதற்கும் MCU. 2 பருத்தி, கம்பு, குதிரைவாலி முதலிய பயிர்கள் பயனடைவதற்கும் உதவியது. K-3 சோளத்தில் குருத்துப் பூச்சியும், K-2 ராகியில் கொள்ளை நோயும் MCU. 2 பருத்தியில் குருத்துப்பூச்சியும் அசுவுணியும் காணப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் போதிய மழையிருந்தது. இம்மழையால் அல்பான்ஸோ, பைரி போன்ற மாம்பழ வகைகள் பயனடைந்தன. நாகர்கோவில் பகுதியில் பெய்த நல்ல மழையால் வளரும் பயிர்கள் பயனடைந்தன.

கோயமுத்தூர் மாவட்டத்தில் போதிய மழையின்மையால் வளரும் பயிர்கள் வாட்டமுற்றன. நெற்பயிரில் இலைப்புள்ளி நோயும் கொள்ளை நோயும், ராகியில் கொள்ளை நோயும், காய்கறிப் பயிர்களில் காய்துளைப்பான்களும் காணப்பட்டன. ஆளியார் நகர் வட்டாரத்தில் பெய்த மழை பயிர்களுக்கு உகந்ததாயிருந்தது. ஆனால் களையெடுப்புக்கு தடங்கலாயிருந்தது. பொள்ளாச்சிப் பகுதியில் போதிய மழையில்லை. சிறிதளவு பெய்த மழை பருத்தி நடவுக்கும், மிளகாய், காய்கறி பயிர்களில் களை எடுப்புக்கும் உதவியது. பருத்தியில் காய்ப்புழுவும் நெற்பயிரில் படைப்புழுவும் இப்பகுதியில் காணப்பட்டன. சேலம் மாவட்டத்தில் மழையளவு குறைவாயிருந்தது. இப்பகுதியில் பெய்த சிறிதளவு மழை கடலைப் பயிருக்கும் ஆமணக்கு பயிருக்கும் உகந்ததாயிருந்தது. நாமக்கல் பகுதியில் பெய்த மழை மானாவாரி ராகி, சோளம், கம்பு பயிர்களுக்கு உகந்ததாயிருந்தது. நெற்பயிர் நடவிற்கும் இம்மழை உதவியது. நெற்பயிரில் அசுவினியும் தத்துப் பூச்சிகளும், மிளகாயில் திரிப்ஸும் காணப்பட்டன.

“ நில வளத்தைப்
பாதுகாக்க ”
பயிர்களால் எடுத்துக் கொள்ளப்படும்
உணவு சத்துக்களை திரும்பவும்
அளிக்க வேண்டும்.
பயிர்களுக்கு அதிகம் நைட்ரஜன்
உரம் மட்டும் உபயோகிப்பதினால்
மண்ணிலிருக்கும் மற்ற சத்துக்கள்
- முக்கியமாக பொட்டாஷ் - வேகமாக
வெளியேற்றப்படுகிறது.
இதனால் நிலத்தின் வளம் குறைகிறது.
உங்கள் நிலத்திலிருந்து அதிக
விளைச்சல் கிடைக்க வேண்டுமாயின்,
நீங்கள் உரமிடும்போது தவறாமல்
பொட்டாஷ்
சேர்க்க
மறந்து விடாதீர்கள்
பயிர்களுக்கு உரமிடுவது சம்பந்தமான இலவச விவரங்கள்,
புத்தகங்கள் மற்றும் ஆலோசனை கிடைக்குமிடம்:
இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜன்ஸி லிமிடெட்
8/9, தம்புசெட்டி தெரு, சென்னை-1
IP.G.23 T

நீலகிரி மாவட்டத்தில் போதிய மழையில்லை. உதக மண்டலத்தில் பெய்த மழை புல்வெளிகளுக்கும் மரம் கொடிகளுக்கும் பயனுள்ளதாக இருந்தது. இந்தப் பகுதியில் ரோஜாச் செடியில் அசுவுணி கடுமையான சேதம் விளைவித்தது. மற்றும் வளரும் உருளைக்கிழங்கு பயிருக்கும் மற்ற காய்கறிப் பயிர்களுக்கும் இம்மழை உதவியது, நஞ்சநாடு பகுதியில் பெய்த சிறிதளவு மழை களை எடுப்புக்கு உதவியது. ஆனால் பயிர் வளர்ச்சிக்கு அதிகமாக உதவவில்லை. உருளைக் கிழங்குப் பயிரில் 'லேட் பிளைட்' நோய் காணப்பட்டது.

குறிப்பிடத்தக்க மழை அளவுகள்
(அங்குலத்தில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	பெய்த மழை.
1	18–10–65	கோயமுத்தூர்	2·09
2	19–10–65	கடலூர்	2·05
3	19–10–65	மதுரை	2·25
4	19–10–65	பாலூர்	3·15
5	24–10–65	பாளையங்கோட்டை	4·33

பிராந்திய மழையளவுகள் (அங்குலத்தில்)

வரிசை எண்	பிராந்தியத்தின் பெயர்.	அக்டோபர் மாத மழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
1	வட பிராந்தியம்	2·4	—5·8	மிகக் குறைவு
2	கீழ்கரைப் பிராந்தியம்	4·7	—4·8	மிகக் குறைவு
3	மத்திய பிராந்தியம்	4·5	—2·5	குறைவு
4	தென் பிராந்தியம்	7·6	+1·0	சற்று அதிகம்
5	மலை பிராந்தியம்	3·1	—7·0	மிகக் குறைவு

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம்:
ராஜா பண்ணைத் தோட்டம்
இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை
மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை
ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி
புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி
வெங்காயம்
இதா பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்
கிடைக்குமிடம்:—
ராஜா பண்ணைத் தோட்டம்
2, வைத்தியராமய்யர் தெரு, தி. நகர்
(இந்தி பிரசார சபா அருகில்), சென்னை-17.
தந்தி: RAJSEED போன்: 42262

1965-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திய மழை அளவு
(அங்குலத்தில்)

இடத்தின் பெயர். (1)	இம்மாத மொத்த மழையளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் மொத்த மழையளவு. (4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்)	4·7	—7·4	21·8
திரூர்குப்பம் *	1·7	—5·7	22·6
வேலூர்	2·1	—4·7	19·5
குடியாத்தம் *	1·0	—5·3	18·0
கீழ்கரைப் பிராந்தியம்			
பாலூர் *	7·1	—1·6	29·5
திண்டிவனம் *	3·1	—6·0	27·2
கடலூர்	4·5	—7·0	21·7
நாகப்பட்டினம்	4·4	—6·2	18·0
ஆடுதுறை *	4·8	—2·6	22·5
பட்டுக்கோட்டை *	4·0	—5·3	21·0
மத்திய பிராந்தியம்			
சேலம்	3·7	—2·8	22·5
சேலம் *	4·6	—4·3	25·7
கோயமுத்தூர் *	1·9	—5·9	13·6
கோயமுத்தூர்	5·4	—1·0	11·7
ஆளியார் நகர் *	3·5	—2·3	13·1
திருச்சிராப்பள்ளி	7·9	+1·6	25·3
தென் பிராந்தியம்			
மதுரை	8·3	+0·9	22·6
பாம்பன்	6·6	—1·9	14·8
கோவில்பட்டி *	4·7	—1·8	18·8
பாளையங்கோட்டை	12·4	+5·3	19·2
அம்பாசமுத்திரம் *	6·5	+0·5	13.9
நாகர்கோயில் *	10·5	+3·3	30·5
கன்னியாகுமரி *	4·2	+0·4	14·3
மலை பிராந்தியம்			
கோடைக்கானல்	4·7	—5·6	37·2
கூனூர் *	2·3	—9·9	28·0
உதகமண்டலம் *	3·0	—6·7	28·6
நஞ்சநாடு *	2·2	—5·8	32·0

குறிப்பு.—*விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள்.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு,
விவசாயத் துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.

கால்நடை கருத்தரங்கம்

(படங்கள் இங்கே ;
கட்டுரை 12-ம் பக்கத்தில்).



கண்காட்சியில் உள்ள தீவனப் பயிர்களைப் பார்வையிடுகிறார் முதலமைச்சர். புற்களைப் பற்றி விளக்கிச் சொல்பவர் திரு. என். இராமசாமி, தீவனப் பெருக்கு அதிகாரி.

கண்காட்சியை மாநில முதல் அமைச்சர், விவசாய அமைச்சர், தகவல்-செய்தி அமைச்சர் முதலியோர் பார்வையிடுகின்றனர்.



வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களும், முட்டைகளும்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1965

வரவேற்புரை நிகழ்த்துகிறார் கால்நடை பராமரிப்புத் துறை நெறியாளர். முன் வரிசையில் அமைச்சர்கள் அமர்ந்திருக்கின்றனர். பின்னால் நிற்பவர் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்.

JL
J:8411m,N65
N65.22

பெருமதிப்பிற்குரிய நம் மாநில முதல் அமைச்சர் திரு எம் பக்தவத்சலம் அவர்கள் தலைமை உரை நிகழ்த்துகிறார்

69675



இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு உள்துறை அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் மூட்டைகள் வழங்குவதை இராணுவ அதிகாரி பெறுகிறார்.